

# தென்னாடு


செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org


மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 20ஆம் நாள் (06-10-2025 திங்கட்கிழமை) நிறைமதி வெளியீடு + 94 21 222 9722





## பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பொலநறுவை இரண்டாம் சிவன் கோயில் - வானவன் மாதேவி ஈச்சரம்

# பொலநறுவை இரண்டாம் சிவன் கோயில்











# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் - தலைமை ஆசிரியர்,**
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# மிகுசைவத் துறைவிளங்க தன்னிகரற்ற சைவத் தலைமை வேண்டும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

இலங்கையில் அனைத்து மதங்களும் நல்லிணக்கமாக இருந்து வருகின்றன. மதங்களுக்கு இடையே எந்தவித பிணக்குகளும் இல்லை. ஆனால் ஒரு சில மதமாற்ற அமைப்புக்களாலும், மற்றும் மதமுனைப்புக் கொண்ட மற்றும் மதநம்பிக்கை அற்ற அதிகாரிகள், சில தனிப்பட்டவர்கள், சில அமைப்புகள், சில சமூகத் தலைவர்களின் நடவடிக்கைகளாலும், பாகுபாடான முடிவுகளாலும் மதநல்லிணக்கம் குழம்புகின்றது என்பது வெளிப்படை உண்மை. இவ்வாறான குழப்பங்களை பலர் கடந்து செல்கின்றனர் சிலர் நின்று கேட்கின்றனர்.

எப்போதுமே எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணாது, ஒருபக்கமான வார்த்தைகளைக் கேட்டு, அவர்களின் எண்ணத்தினை, நோக்கத்தினை அறியாமலும் மற்றும் பண்பாட்டு அழிவுகளைச் சிந்திக்காமல் அதனை தட்டிக் கேட்பவர்களை மதநல்லிணக்கத்தினை குழப்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டினை இலகுவாக முன்வைத்து தம்மை தக்கவைக்கும் அமைப்புகளை, அதிகாரிகளை, சமூகத் தலைவர்களை நாங்கள் எங்கள் ஆழமான சிந்தனைகளின் ஊடாக அறிவது மட்டுமல்ல, அவர்களின் கபட நாடகத்தினை உலகிற்கு எடுத்துக்காட்டவும் வேண்டும்.

மற்ற மதங்களுக்கு உள்ள, மதக் கட்டமைப்பு மற்றும் மதத் தலைமை, இலங்கையில் எங்கள் சைவசமயத்திற்கு இல்லை என்பது கசப்பான உண்மை. பௌத்தர்களுக்கு வலிமையான பௌத்த பீடங்கள், ஏன் இலங்கை அரசாங்கமே பின்னிற்கிறது. இது அவர்கள் தத்தம் மதங்களில் கொண்ட பற்றினைப் பறைசாற்றி நிற்கிறது. அதுபோல் கிருத்துவ மதத்தில் ஆண்டகை, பங்குத் தந்தைகள், பல தேவாலயங்கள் அவைசார் பாதிரியார்கள் என்று முழுமையான மதக்கட்டமைப்பு இலங்கையில் இருக்கிறது. அதுபோல முகமதியர்களுக்கும் சிறந்த மதக்கட்டமைப்பு மட்டுமல்ல ஒவ்வொரு முகமதியருமே தங்கள் மதத்தின் கொள்கைகளில் தெளிவாகவும், ஆழமாகவும் உள்ளனர். ஆனால் இலங்கையில் உள்ள சைவர்களுக்கு குரல் கொடுக்க யார் உள்ளார்கள் என்ற கேள்வி என்னைப் பல்லாண்டு காலமாய் உருக்கி வருகிறது.

முன்னொரு காலத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால், அதன் செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்கள் பல விடயங்களுக்கு சைவர்கள் சார்பாக துணிந்து குரல்கொடுத்தார். அவரின் மறைவிற்கு பின்னர் அதுவும் குறைந்துள்ளது. இலங்கையில் பல சைவ அமைப்புகள், சமூக அமைப்புகள் இருந்தாலும், அவர்களிடையே ஒற்றுமைக் குறைவு, மாகாணப் பாகுபாடு, மாவட்டப் பாகுபாடு, மற்றும் ஆளுமையும் திறமையும் கொண்ட தலைமைக் குறைவு, பெயரை மற்றும் தம்மை முன்னிலைப்படுகின்ற தலைமைகள் என்று பல இடைவெளிகள் இருப்பதனால், எங்களுக்கு என்று தன்னிகரற்ற சைவத் தலைமைகள் இல்லை என்றே கூறலாம்.

நாயன்மார் குருபூசை வைப்பது அவர்களின் அருளைப் பெறுவற்கு மட்டுமல்ல, அவர்களின் சைவத்திற்கான சேவைகளை நினைவுபடுத்தவும் வேண்டியாகும். அதுபோல் சைவப் பெரியர்களுக்கு சிலை வைப்பது அவர்களை நினைவுபடுத்த மட்டுமல்ல, அவர்களின் சேவைகளை நினைவுபடுத்த வேண்டியுமாகும். உதாரணமாக ஆறுமுகநாவலருக்கு சிலை வைக்கின்றோம் என்றால் அதில் சிற்பியின் பெயர், நிதியாளரின் பெயர் மற்றும் திறந்து வைத்தவர் பெயர்களைப் பொறிப்பதற்கு மட்டுமல்ல, ஆறுமுகநாவலர் செய்த சில செயல்கள் மற்றும் அவரின் சில வாக்கியங்களை அடுத்த தலைமுறைக்கு நினைவுபடுத்தவே.

இலங்கையில் இரண்டு சைவ ஆதீனங்கள் உள்ளன ஒன்று நல்லை மற்றது தென்கயிலை. அதில் நல்லை ஆதீனம் இன்று மூடிக்கிடக்கிறது. சைவ வழி நின்று, சைவ சித்தாந்தம் பேசி, சிவபூசை செய்து, சைவ விழுமியங்களை மக்களுக்கு எடுத்துச்செல்ல மற்றும் சைவ சமயத்திற்காக குரல்கொடுக்க அமைப்புகள் வேண்டும், தலைமைகள் வேண்டும் என்று எல்லாம்வல்ல பரம்பொருளை வேண்டி தினமும் பிரார்த்தனை செய்வதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியவில்லை. இதனை இனி வரும் இளைய சமுதாயமும் கருத்தில் கொண்டு, இந்த இடைவெளியை நிரப்ப முன்வரவேண்டும்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(07-09-2025) – தென்னாட்டின் அறுபத்தோராவது திங்கள் இதழ் வெளியீடு கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 22ம் நாள் நிறைமதி அன்று (07-09-2025 ஞாயிற்றுக்கிழமை) நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபர் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள், யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் பதில் அதிபர் சிவத்திரு. செல்வநாயகம் சத்தியரூபன் அவர்கள், ஒசுத்திரேலியா சிட்னியை சேர்ந்த அருட்கொடையாளி சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்கள் மற்றும் கடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் என அடியார்கள் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபர் சிவத்திரு. சந்திர மௌலீசன் லலீசன் அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் அறுபத்தோராவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார். தொடர்ந்து ஏனையோர்களுக்கு இதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

அன்றைய நாளில், எங்கள் தென்னாடு சைவ மாணவர் சபையின் திருக்கோயில் அமைக்கும் பணிகளில், பெரும் பங்கினை ஆற்றி, நான்கு திருக்கோயில்களுக்கான முழுமையான நிதிப் பங்களிப்பினை வழங்கியுள்ள அருட்கொடையாளர் சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களையும், யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் பதில் அதிபராக கடமையேற்று, பாடசாலைப் பணிகளுடன் எங்கள் தென்னாடு சைவ மாணவர் சபையினால் அமைக்கப்பட்ட **"தாயுமானவர் சுவாமி"** திருக்கோயில் பூசைப் பணிகளையும் சிறப்பாக ஆற்றி வருகின்ற சிவத்திரு. செல்வநாயகம் சாத்தியரூபன் அவர்களையும் சிறப்பித்து கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

மேலும் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களிற்கான கௌரவிப்பும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

(15-09-2025) - சைவநெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டுத் திருத்தல யாத்திரை சென்று திரும்பிய அடியார்கள் 18 பேர் தென்னாட்டில் தங்கி, அமுது செய்விக்கப்பட்டு, திருக்கோயில் வழிபாட்டிலும் கலந்துகொண்டனர். கடந்த 06-09-2025 அன்று அடியார்கள் யாத்திரைக்கு செல்லும் போதும் மடத்தில் தங்கி சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(19-09-2025) – புரட்டாசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றன. (20-09-2025) – தமிழ்நாடு கந்தர்வகோட்டை கயிலை அறக்கட்டளையின் நிறுவுனர் முனைவர் சிவத்திரு. இரா. துரைசாமி அவர்களின் தலைமையில் தென்னாட்டில் திருமுறை விண்ணப்ப வழிபாடுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் நயினாதீவு தில்லைவெளி பிடாரி அம்பாள் ஆதீனம் சார்ந்தோர்களும், பல்கலைக்கழக மாணவர்கள், அறநெறி மாணவர்கள் மற்றும் அடியார்கள் என பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்டு பஞ்சபுராணம் ஓதி சான்றிதழ்களும் பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(21-09-2025) - தென்னாட்டில் பேரொடுக்க மறைமதி (மாலய அமாவாசை) வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. ஐம்பூதநாத பெருமானுக்கான திருமஞ்சனத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அடியார்கள் பலரும் கலந்து கொண்டு பிதிர்வழிபாடுகள் ஆற்றியிருந்தனர்.

(21-09-2025) - ஒன்பானிரவு (நவராத்திரி) வழிபாடுகள் ஆரம்பமாகியிருந்தன. (26-09-2025) – தென்னாடு மடத்தின் சிவப்பணிகளுக்காக, முழுநேர அடியாராக சிவத்திரு. பழனியாண்டி சிவஞானமூர்த்தி ஐயா அவர்கள் இணைந்து கொண்டார். (02-10-2025) - ஒன்பானிரவு இறுதிநாள் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாட்டில் அடியார்கள் பலரும் கலந்து கொண்டதோடு, சிவமங்கையர்கள் திருமங்கலி (சுமங்கலி) வழிபாடுகளையும் ஆற்றியிருந்தனர். (04-10-2025) – ஆவணித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# சைவநெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டுத் திருத்தல யாத்திரை




இறைவன் திருவருளால், இலங்கை சைவநெறிக் கழக ஏற்பாட்டில் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த மையத்தின் **“சைவ சித்தாந்த கற்கை நெறி”** வகுப்புகள் யாழ்ப்பாணம் மற்றும் கொட்டகலையிலும் நடைபெற்று வருகின்றன.

திருவருள் கைகூடி இந்த கற்கை நெறியில் பயிலும் யாழ்ப்பாணம், மலையக மாணவர்களும், சைவநெறிக் கழக அறநெறி ஆசிரியர்களும், நிர்வாகத்தவர்களும், சிவனடியார்களுமாக 47 பேர்கள் கடந்த 06/09/2025 முதல் 15/09/2025 வரையிலான காலப்பகுதியில் காங்கேசன்துறையிலிருந்து நாகப்பட்டினத்திற்கு கடல் மார்க்கமாக திருத்தல யாத்திரை சென்று திரும்பினர்.

இது இலங்கை சைவநெறி கழகத்தாரின் வெற்றிகரமான முதல் கன்னி முயற்சியாகும். அவர்கள் நடாத்தும் சைவ சித்தாந்த வகுப்புகள் இலங்கையில் இன்னும் பல இடங்களில் தோன்றவும், இதுபோன்ற பல தலயாத்திரைகளை மேற்கொண்டிடவும் இத்திருத்தல யாத்திரை தொடக்கப்புள்ளியாக அமைந்திருந்தது.

திருத்தல யாத்திரையில் சென்றவர்களுக்கு யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு சிவமடத்திலும், திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவையாறு, மதுரை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் தங்குமிட வசதிகளும் திருவமுதும் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை சைவநெறிக் கழகம் சிவப்பணியாக இத்திருப்பணியைக் கருதி இயன்றளவு கட்டணங்களைக் குறைத்து, மிகக்குறைந்த கட்டணமே கலந்து கொண்டோரிடம் பெற்றுக்கொண்டது, இவ்வாறு பலருடைய நிதிக்கொடுப்பனவுகளை அவர்களுடைய பொருளாதாரச் சூழல்களைக் கருத்திற்கொண்டு பொறுப்பெடுத்துப் பெரும் பொருளாதாரச் சுமையுடனேயே திருத்தல யாத்திரையை ஏற்பாடு செய்துள்ளது என்பதனை அறிந்துகொண்ட சிவத்திரு. ஜெயசீலன் ஐயா அவர்களுடைய பணிப்புரையில் சுபம் கப்பல் நிறுவனத்தினர் மூன்று அடியார்களுடைய கப்பல் கொடுப்பனவைத் தாமே பொறுப்பெடுத்து சிவப்பணியாற்றினர் என்பதும் போற்றுதலுக்குரியது.

இந்த திருத்தல யாத்திரையில் அடியார்கள் வழிபாடாற்றிய தலங்களாவன.

1. **திருவாரூர்** - அல்லியங்கோதை உடனுறை புற்றிடங் கொண்ட நாதர்.
2. **திருவிற்குடிவீரட்டம்** - ஏலவார்குழலி உடனுறை வீரட்ட னாதர்.
3. **திருபயற்றங்குடி(திருப்பயற்றூர்)** - காவியங்கண்ணி உடனுறை பயற்றூர்நாதர்.
4. **திருசெங்காட்டன்குடி** - திருக்குழனன்மாது உடனுறை கணபதீச்சுரர்.
5. **இராமனதீச்சரம்** - சரிவார்குழலி உடனுறை இராம நாதர்.
6. **மயிலாடுதுறை** - அஞ்சொனாயாகி உடனுறை மயூரநாதே சுவரர்.
7. **திருப்புகலூர்** - கருந்தார்க்குழலம்மை உடனுறை அக்னீசு வரர் (கோணப்பிரான்).
8. **திருவெண்காடு** - பிரமவித்திநாயகி உடனுறை சுவே தாரணியேசுவரர்.
9. **கோயில் (சிதம்பரம்)**

   (அ) கனகசபை : - சிவகாமியம்மை உடனுறை சபா நாயகர் (நடராசர்).

   (ஆ) திருமூலட்டானம் : - உமையம்மை உடனுறை திருமூலநாதர்.
10. **சீர்காழி** - திருநிலைநாயகி (திரிபுரசுந்தரி) உடனுறை தோணியப்பர்.
11. **திருநாவலூர்** - சுந்தராம்பிகை உடனுறை நாவலேசுவரர்.
12. **திருவெண்ணெய்நல்லூர்** - வேற்கண்மங்கையம்மை உடனுறை தடுத்தாட்கொண்டார்.
13. **திருவண்ணாமலை** - கிரிவலத்துடன் ஆரம்பம் - உண்ணா முலையம்மை உடனுறை அண்ணாமலையார்.
14. **திருவையாறு** - அறம்வளர்த்த நாயகி (தர்மசம்வர்த் தினி) உடனுறை செம்பொற்சோதிநாதர் (ஐயாறப்பர், பஞ்சநதேசுவரர்).
15. **தஞ்சை பெருங்கோயில்** - பெரியநாயகி உடனுறை பெ-ருவுடையார்.
16. **திருச்சிராப்பள்ளி** (மலைக்கோட்டை) - மாட்வார் குழலம்மை உடனுறை தாயுமானவர்.
17. **திருவாலவாய் (மதுரை)** - மீனாட்சியம்மை உடனுறை சொக்கலிங்கப்பெருமான்.
18. **திருப்பூவணம்** - மின்னம்மை உடனுறை பூவணநாதர்.
19. **திருஉத்தரகோசமங்கை** - மங்களாம்பிகை உடனுறை மங்களேசுவரர்.
20. **திருஇராமேச்சுரம்** - மலைவளர்காதலி (பர்வதவர்த்தினி) உடனுறை இராமநாதர்.
21. **திருவாவடுதுறை** - ஒப்பிலாமுலையம்மை உடனுறை மாசிலாமணியீசர் (செம்பொற்றியாகர்).
22. **நாகபட்டினம்** - கருப்பஞ்ச்சாறு குரலாள் உடனுறை சட்டையப்பர் (ஆதிபுராணர், ஆதிகாயாரோகணேசு வரர்).

ஈழத்துச் சிவனடியார்களுக்கு கிடைத்தற்கரிய இந்த வாய்ப் பினை ஒழுங்கு செய்த இலங்கை சைவநெறிக் கழகத்தினரைப் போற்றுவதுடன், அவர்களின் சிவப்பணிகள் இடைவிடாது தொடர்ந்திட என்றும் தென்னாடு ஐம்பூதநாதர் திருவருள் புரிந்திடுவாராக.

**திருச்சிற்றம்பலம்**









# தென்னாட்டில் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கௌரவிப்பு









தென்னாட்டின் அறுபத்தோராவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 22ம் நாள் நிறைமதி அன்று (07-09-2025 ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது. அன்றைய நாளில் இணை நிகழ்வாக, கடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை சிறப்பித்தது கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபர் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள், யா / கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் பதில் அதிபர் சிவத்திரு. செல்வநாயகம் சாத்தியரூபன் அவர்கள், ஒசுத்திரேலியா சிட்னியை சேர்ந்த அருட்கொடையாளி சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களிற்கான கௌரவிப்பினை வழங்கியிருந்தனர்.

அந்த வகையில் 194 புள்ளிகளைப் பெற்று, தமிழ்மொழி ஊடகத்தில் தேசிய மட்டத்தில் முதல்நிலை பெற்ற யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் செல்வன். ஆனந்தசோதி லக்ஷயன், 178 புள்ளிகளைப் பெற்று, பாடசாலை மட்டத்தில் முதல்நிலை பெற்ற மாணவன் செல்வன். நிருபன் லோஜினன், 170 மற்றும் 150 புள்ளிகளைப் பெற்ற தெல்லிப்பளை சந்திரமௌலீசர் திருக்கோயில் அறநெறி மாணவர்கள் செல்வன். ஜெயகனேஷ் மோகன் மற்றும் செல்வன். சுதாகரன் துபிசனந், 169 புள்ளிகளைப் பெற்ற யா/ யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் செல்வன். ஜெயந்தன் காரூண்யன், 142 புள்ளிகளைப் பெற்ற யா/ பெரியபுலம் மகா வித்தியாலய மாணவி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

**திருச்சிற்றம்பலம்**

# கோண்வால் சிவன் கோயிலுக்கு பன்னிரு திருமுறைத் தொகுப்பு வழங்கல்



எங்கள் மடத்தினரால் கனடா கோண்வால் சிவன் கோயிலுக்கு பன்னிரு திருமுறைத்தொகுப்புபுத்தகங்கள்வழங்கப்பட்டன. சிவபெருமானின்திருவருள்கருவூலமாக விளங்கும் பன்னிரு திருமுறைகளும், சிவபெருமான் உமையம்மை முன்னிலையில் வைக்கப்பட்டு மலர்கள் இட்டு தூபதீப ஆராதனைகள் செய்யப்படுகின்றன.

திருமுறைகளின் உயர்வையும் சிறப்பையும் உலகறியச்செய்யும் வண்ணம் எங்கள் மடத்தினால் திருமுறைத் தொகுப்புகள் உலகின் பலபாகங்களில் இருக்கும் கோயில்களுக்கு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகாகும்**
**திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்**
**திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதிய அருள்தெய்வ நூலாம்**
**திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்**

**திருச்சிற்றம்பலம்**

# பா.சற்குருநாதன் ஓதுவாமூர்த்திகளுக்கு 'கலைமாமணி' விருது



தமிழக அரசின் சார்பில் இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் ஆண்டுதோறும் சிறந்த கலைஞர்களுக்கு வழங்கப் பட்டு வரும் **"கலைமாமணி"** விருதுகளில், கடந்த 2021, 2022, 2023 ஆண்டுகளுக்கான விருதாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விழா தமிழக முதல்வர் தலைமையில் அடுத்த மாதம் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறவுள்ளது. இந்நிகழ் வில் விருதாளர்களுக்கு 3 சவரன் தங்கப்பதக்கம் மற்றும் விருது பட்டயம் வழங்கப்படும். இம்முறை, ஆண்டுதோறும் 30 பேர் என மொத்தம் 90 பேர் தெரிவாகியுள்ளனர்.

அதன்படி, திருமுறை தேவார இசைத் துறைக்கான 2021-ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது, ஓதுவாமூர்த்தி கள் நலச்சங்கம் பொறுப்பாளரும், சென்னை கபாலீச்சரர் திருக்கோயில் ஓதுவார் மூர்த்திகளாக பணியாற்றி வரும் **"திரு முறைக் கலாநிதி"**, **"திருவாசக செந்நாவலர்"**, **"பண்ணிசைப் பேரறிஞர்"** பா.சற்குருநாதன் ஓதுவாமூர்த்திகளுக்கு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

இசைத் துறையில் திருமுறைகளைப் பாடும் ஓதுவார்களின் பணி உயர்த்திப் போற்றப்படும் வகையில் வழங்கப்படும் இந்த கலைமாமணி விருது, பா.சற்குருநாதன் ஓதுவாமூர்த்தி களின் தொண்டுக்கு பெருமை சேர்த்துள்ளதுடன், ஓதுவார் மரபையும் ஊக்குவிக்கும் விதமாக அமைந்துள்ளது.

தென்னாடு தொலைக்காட்சி வாயிலாக பல காணொளி களை பாடியருளி வருகின்ற பா.சற்குருநாதன் ஓதுவா மூர்த்திகளை வாழ்த்துவதோடு, மேலும் பல விருதுகள் பெற்று சீரும் சிறப்புமாய் வாழ, எல்லாம் வல்ல தென்னாடு ஐம்பூதநாதரிடம் விண்ணப்பம் வைக்கிறோம்.

**திருச்சிற்றம்பலம்**

# சைவ, இளஞ்சைவப்புலவர் பெறுபேறுகள் வெளியீடு




அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத் தப்பட்ட 2025 ஆம் ஆண்டிற்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்டத் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என்று சங்கத்தின் செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார்.

சைவப்புலவர் பட்டத் தேர்வில்,

- **திருமதி செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி (கிளிநொச்சி),**
- **திருமதி அகிலா சிறிகுமார் (வவுனியா),**
- **திருமதி அமிர்தகலா சுதர்சன் (யாழ்ப்பாணம்),**
- **திருமதி ஜெயலோசனா சிவஞானசுந்தரம் (கொழும்பு)**

ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளஞ்சைவப்புலவர் பட்டத் தேர்வில்,

- **திரு. குணராசா பாபு (கல்முனை),**
- **செல்வி ராஜ்குமார் கனுஷ்சியா (வாழைச்சேனை),**
- **செல்வி சண்முகம் கிதுர்சனா (மட்டக்களப்பு),**
- **செல்வி ரவிக்குமார் குபேனி தர்ஷா (மட்டக்களப்பு)**

ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

சைவத் தொண்டை வளர்த்து, இளம் தலைமுறையினரை ஈர்க்கும் நோக்கில் வருடந்தோறும் இந்தத் தேர்வுகள் நடை பெறுகின்றன. இம்முறை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு விரைவில் பட்டமளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டு, பொதுமக்கள் முன்னிலையில் கௌரவிக்கப்படவுள்ளதாக சங்கம் அறிவித்துள்ளது.

சித்தியடைந்த அனைவரையும் வாழ்த்துவதோடு, அவர்கள் சிவப்பணியை சிறப்புற தொடர்ந்திட தென்னாடு ஐம் பூதநாதப் பெருமான் அருள்புரிவாராக.

**திருச்சிற்றம்பலம்**

# பேரூர் ஆதீன தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு - புரட்டாசி மகம் (17-10-2025)



திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம்

ஆதி குருமுதல்வர் சாந்தலிங்கப்பெருமான் அருள்வழியில் சைவமும் தமிழும் வளர, மக்கள் மனம் மலர் திருக்கோயில்களைப் பேணுவதையும் அமைப்பதையும் வழி வழியாகச் செய்து வருவது பேரூராதீன மரபு. பேரூர் ஆதீனத்தின் இருபதாம் பட்டமாக அருளாட்சி செய்த மௌன சுவாமிகள் ஒரு நாளைக்கு ஒரு காசு பெற்று பேரூர் பட்டிப்பெருமான் திருக்கோயில் திருப்பணியும், திருத்தேர் பணியும் செய்தது வரலாறு. அதனைத் தொடர்ந்து 22 மற்றும் 23 ஆம் குருமகா சந்நிதானங்களான மாணிக்க அடிகளாரும், ஆறுமுக அடிகளாரும் சிதலம் அடைந்திருந்த சாந்தலிங்கப்பெருமான் சமாதித் திருக்கோயில் திருப்பணியும் பல்வேறு கோயில் திருப்பணிகளையும் முன்நின்று செய்தனர்.

அந்த வழியில், எமது காலத்தில் பேரூராதீனம் இருபத்து நான்காம் குருமாசந்நிதானம் கயிலைக் குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை, நூற்றாண்டு நாயகர், திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள், செம்மேடு அருகில் உள்ள முட்டத்து நாகேசுவரர், கோயில் பாளையம் காலகாலேசுவரர், சேவூர் வாலீசுவரர், முத்தூர் சோழீசுவரர் ஆகிய பழம்பெரும் திருக்கோயில்களை மீளுருவாக்கம் செய்வதில் பெரும்பங்காற்றி உள்ளார். மேலும் சிரவையாதீனம் மூன்றாம் குருமகாசந்நிதானங்கள் தவத்திரு சுந்தரம் அடிகளாருடன் இணைந்து, திருப்பூர் மாவட்டம் அவிநாசித் திருக்கோயில், திருமுருகன்பூண்டித் திருக்கோயில் மற்றும் பல்வேறு திருக்கோயில்களிலும் திருப்பணித் தலைமை ஏற்றுச் சிறப்பான பணிகளைச் செய்த பெருந்தகையாளர்.

இராமசாமி அடிகளாரின் 90 ஆம் நாண்மங்கல விழாவின் போது பேரூர் ஆதீனத்திற்கு விட்டுச்சென்ற பணிகளில் முக்கியமான நான்கு பணிகளாவன,

**1.தமிழகமெங்கும் உள்ள சிவாலயங்களைக் கணக்கெடுத்து சிதலமடைந்த சிவாலயங்களைச் சீர் செய்தல்.**

**2. பல்நோக்கு மருத்துவமனை அமைத்தல்**

**3. ஆதீனத் தமிழ்க்கல்லூரியைப் பல்கலைக்கழகமாக உயர்த்துதல்**

**4.சுற்றுப்புறச் சூழலைக் காக்க மூவனம் அமைப்பைச் சி-**

**றப்பாக நடத்துதல் ஆகியன.**

அவ்வகையில் முதற் பணியை **"பேரூராதீனம் - விருப்புடன் திருப்பணி'** என்ற திட்டத்தின்படி கீழ் முன்னெடுத்து வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் பேரூராதீனம் மூலம் தமிழகமெங்கும் சுமார் 8000 சிவாலயங்கள் கணக்கெடுக்கப் பட்டுள்ளன.மேலும் தென் மாநிலங்களில் உள்ள சிவாலயங்களைக் கணக்கெடுக்கும் பணி கேரளாவை முதன்மையாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. கடந்த ஆறு வருடங்களில் சுமார் 50ற்கும் மேற்பட்ட திருக்கோயில் களில் திருப்பணிகள் நடைபெற்று, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றுள்ளது. மேலும் சுமார் ஐந்து கோடி ரூபாய் அளவில் பல்வேறு சிறு மற்றும் பெருந்திருக்கோயில் களில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக அன்பர்கள் மாதந்தோறும் ரூபாய் நூறு, ஆயிரம், பத்தாயிரம் என்ற அளவில் ஆதீனத்திற்கு, வழங்கி ஒத்துழைப்பு நல்கி, ஆதீனத்தின் கரத்தை வலுப்படுத்தி வருகின்றனர்.

அடிகளாரின் சிந்தனைக்கு அமைய இன்று அரன்பணி அறக்கட்டளை உட்பட பல அமைப்புகள் சிதலமடைந்த கோயில்களை புனரமைத்து, திருக்குடநீராட்டு செய்து வருகின்றன.

இராமசாமி அடிகளார் எப்போதும் தமிழ்ப்பயிற்று மொழி மற்றும் தமிழ்வழிபாட்டுமொழி என்ற திடமான கருத்தினை உரக்க சொல்லியது மட்டுமல்ல செயற் படுத்தியும் வந்தார். 2004 ஆம் ஆண்டு , திருநெறிய தமிழாகமத் திருக்குட நன்னீராட்டு என்று மலரினை எழுதி வெளியிட்டிருந்தார். அந்த மலரில் அடிகளார் எழுதிய முன்னுரையில் இருந்து ஒரு பகுதியை இங்கே தருகிறோம்.

நம் செந்தமிழ் மொழியில் இருந்த சமய நூல்கள் நாளடைவில் மறைக்கப்பட்டன. அயல் வழக்குகளில் மக்கள் மயங்கினர் எனவே அது ஆட்சியிலும் அமர்ந்தது. இதனால் சமயத்துறையில் பொருளற்றவைகளும் போலிகளும் பெருக வழியேற்பட்டது. பொருளுள்ளவையும் புரியாப் புதிராயின. ஆகவே சமயத்துறையில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது் ஈடுபடுவோரும் தெளிவின்றிச் சோர்ந்தனர்.

இந்நிலையில் தாய்மொழியிலேயே பொருளுணர்ந்து இறைவனை வழிபட்டும் வாழ்வியல் சடங்குகளையும் திருக்கோயில் வழிபாட்டு முறைகளையும் மேற்கொண்டு பயன்பெற வேண்டுமென்று அருளாளர்களும் சான்றோர் களும் முயன்றனர். அதனை நடைமுறைப் படுத்தினோம். ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் அனைத்தும் தமிழ் மரபில் திருமுறைவழியில் திருக்குட நீராட்டுகள் நடைபெற்றன. ஊர்தோறும் சமய உணர்வுகள் பெருகின. அங்கெல்லாம் வன்முறை உணர்வுகள் மங்கின. நெஞ்சுருகி வழிபடத் துணைபுரியும் தமிழ் மரபுகாத்துத் தமிழால் எதையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையோடு இத்துறையில் இறங்குபவர்கள் வெற்றியடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

கோவையில், குறிப்பாக பேரூரில் பட்டியப்பன் ஐயா, சென்னியப்பன் ஐயா, தவத்திரு.இராமசாமி அடிகளார் போன்றோரின் பெருமுயற்சியால், தமிழ் மொழி மூலமான வழிபாடு மீண்டும் புத்துணர்ச்சி பெற்றது எனலாம்.

அடிகளார் தனது வாழ்த்துச்செய்தி, ஆசிச்செய்தி, பொங்கல் வாழ்த்து, புதுவருட வாழ்த்து எந்தச் செய்தியானாலும் தமிழ்மொழி வழிபாடு, திருமுறை வழிபாடு என்று சிவத்துடன் மாறாத நிலைப்பாட்டில் தான் தனது செய்தியை எழுதுவார்.

அவற்றில் இலங்கையில் நடைபெற்ற இரண்டாவது உலக இந்து மாநாட்டின் மலருக்கு அடிகளார் எழுதிய ஆசியுரையில் ஒரு பகுதி உங்கள் பார்வைக்கு.

**தென்னிலங்கை எனப் போற்றத் திகழ்ந்த தமிழறிஞர் பலர்**
**சென்னிமதி யணிந்த பிரான் திருவடியைப் போற்றுவதில்**
**நன்னிலை பெற்றவர்கள் பலர் ஆறுமுக நாவலர் தம்**
**சொன்னயமும் பொருள் நயமும் துலங்கியது தமிழுலகில்**

**திருநெறிய தமிழ் மரபாம் சித்தாந்தச் செந்நெறியில்**
**ஒருமைமிகு வழிபாட்டால் உணர்ந்தோதும் உளப்பாங்கால்**
**திருத்திய நற்கலை வளர்த்தார் சிறுவர்முதல் அனைவருக்கும்**
**திருமுறையைப் பயிற்றுவித்தார் செய்ய தமிழ் நெறிவளர்த்தார்.**

அதுபோல் பேரூர் ஆதீனத்தினால் வெளியிடப்பட்ட ஒரு பொங்கல் வாழ்த்தில் இருந்து ஒரு பகுதி,

**வளமார் தமிழால் திருமணங்கள் வாழ்வுக்குரிய புதுமனை புகுதல்**
**உளங்கொள் திருக்குட நீராட்டு உயர்வுக்குரிய வாழ்வியல்கள்**
**தளர்வில்லாத வழிபாட்டில் தமிழே முழங்க வரும் பொங்கல்**
**களங்கள் தோறும் மாடு வளம் பெருகக் காண்போம் நற்பொங்கல்**

இந்த ஆண்டு அடிகளாரின் நூற்றாண்டாக கொண்டாடப்படும் போது, அவரின் வழியில் அவர் சிந்தனையில் அவர் விட்டுச் சென்ற சிவப்பணியை நாமும் தொடருவோம்.

**தொகுப்பு:**
**தென்னவன் பார்த்தீபன் (நிறுவுனர்)**
**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்**
**இலங்கை.**

# சொற்சிலம்பம்-7

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 02 | | | |
| | | 03 | | | | | |
| | | | | 04 | | | 05 |
| | | | | | | | |
| | 06 | | 07 | | | | |
| | | | | | 08 | | |
| | | | | | 09 | | |
| | | | | 10 | | | |

### இடமிருந்து வலம்

*01.* தென்கயிலையின் தலவிருட்சம்
*03.* பலன் விரும்பி செய்யும் கிரியை
*04.* உந்திக் கமலத்தில் உதித்தோன். (திரும்பி)
*06.* மனம் கட்டுப்பட கைக்கொள்வது
*08.* ஒளிமுதல் (திரும்பி)
*09.* செல்வம் (குழம்பி)
*10.* வினைப்பயன்

### மேலிருந்து கீழ்

*01.* இராசேந்திர சோழனின் பெயர்
*02.* கட்டடக்கலையின் கடவுள்
*03.* சிவனின் உருத்திர வடிவங்களில் ஒன்று
*05.* கடவுளைப் பற்றிய அறிவு
*06.* பாண்டுவின் சகோதரன்
*07.* உயர்ந்த ஆன்மீக பயிற்சி

**பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற்றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப்படுத் தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியாளர் களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்புதல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடிதஉறையின் மேல்மூலையில் "சொற்சிலம்பம்" என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
**ஐப்பசித் திங்கள் 14 ஆம் நாள் (31-10-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# சொற்சிலம்பம்-6

**(கடந்த திங்கள் சொற்சிலம்பத்திற்கான விடைகள்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 ஆ | 02 க | ம | ம் | | 03 அ | னா | 04 தி |
| 05 ல் | ம் | சோ | த | ர | ன் | | ரு |
| ய | போ | | 06 செ | ப் | பு | | கோ |
| ம் | டி | | 07 ல் | க | வி | | ண |
| | யா | | ல | | | | ம |
| 08 பொ | ல் | லா | ப் | பு | | 09 இ | லை |
| ற் | | | 10 பா | யி | 11 ர | ம் | |
| 12 பு | ல | ன் | | 13 ப | தி | ப் | பு |

### இடமிருந்து வலம்

*01.* சைவசமய நடைமுறைகளை வகுத்து சொல்வது
*02.* காலத்தால் அளவிட முடியாதது
*05.* விநாயகர்
*06.* தெய்வீக உலோகம்
*07.* அறியாமை களைவது (குழம்பி)
*08.* தீமை அல்லது துன்பம்
*09.* இறைவனை வழிபட அனைவரும் இடும் பொருள் (திருமந்திரம் சொல்வது)
*10.* ஒருவர் எழுதும் நூலுக்கு பிறிதொருவர் எழுதும் சிறப் பித்தல் பா.
*12.* இது ஒடுங்கினால் தியானம் கிட்டும்
*13.* உ. வே சாமிநாதையர் செய்த பெரும்பணி

### மேலிருந்து கீழ்

*01.* ஆன்மீக மையம்
*02.* உலகின் மிகப்பெரிய சிவன்கோயில் அமைந்திருப்பது.
*03.* சிவம்
*04.* தென்கயிலை
*06.* ஈழத்து சித்தர்களில் ஒருவர்
*08.* அழகு
*11.* காமனின் மனைவி

**பரிசில் பெறுபவர்**
**செல்வன். ஈ. அன்பரசன்**
**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## இலங்கையிற் சோழர் ஆட்சிக்காலத்தில் சைவக் கோயில்களும் பண்பாடும்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு




தமிழர் வரலாற்றில் சோழர் பெருமன்னர் காலம் ஏனைய மன்னராட்சிக் காலங்களை விட, அரசியல் அமைதியும் நிர்வாகத்தில் நேர்த்தியும் ஏற்பட்டிருந்தமையால் சமயம், தத்துவம், கலை, இலக்கியம் முதலான துறைகள் நன்கு வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றன. இதனால் இக்காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் பொற்காலம் என்று போற்றுவர். சோழப் பெருமன்னர்களின் ஆதிக்க உணர்வும், கடற்படை வலிமையும் கடல்கடந்த நாடுகளிலும் அவர்தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்த உதவிற்று. குறிப்பாக பத்தாம் நூற்றாண்டின் முடிவின் முதலாக முதலாம் இராசராச சோழனின் ஆட்சியில் அயலிலுள்ள இலங்கை, மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் அவர்களின் ஆதிக்கமும் சமயப்பண்பாடுகளும் வலுப்பெற்றுச் செல்வாக்குற்றிருந்தது.

இதற்குத் தமிழக வணிக குழுக்களின் பேருதவிகளும் சோழர்களுக்குத் துணை புரிந்தன. இந்த அடிப்படையில் இலங்கையிற் சோழராதிக்கம் கி.பி 993 முதல் கி.பி 1070 ஆம் ஆண்டுகள் வரை நீடித்திருந்தது. இக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட சைவசமயப் பண்பாட்டு விருத்தியில் இராசராசசோழன் அவன் மகன் இராசேந்திர சோழர்களது பங்களிப்பு காத்திரமாக அமைந்திருந்தது. குறிப்பாக இலங்கையின் சோழர் ஆட்சியை பொற்காலம் என்று கூறமுடியாவிட்டாலும் சைவத்தின் எழுச்சிக் காலம் என்று குறிப்பிடலாம். அது இலங்கையில் ஏற்பட்டிருந்த பழைமை வாதங்களைத் தவிர்த்து தமிழ்நாட்டில் எழுச்சி பெற்ற சைவக்கோயில்களும் படிமக் கலைகளும் சார்ந்து வளர்ச்சி பெற்றதெனலாம்.

### இலங்கையில் சோழர் ஆதிக்கம்

தமிழகத்தில் காலாகாலம் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் அயல்நாடான இலங்கையையும் பாதிக்கவே செய்தன. அந்த வகையில் சோழப் பேரரசரான முதலாம் இராசராசன் தனது எட்டாம் ஆட்சி ஆண்டிலே (கி.பி.993) இலங்கை மீது படையெடுத்து வந்து இங்கு ஆட்சிசெய்த மிகிந்தனைத் தோற்கடித்து இராசரட்டையைக் கைப்பற்றி தனது ஒன்பது மண்டலப் பிரிவினுக்குள் ஒன்றாகக் கொண்டு வந்தான். அதனால் இலங்கை ஈழமான மும்முடிச்சோழமண்டலம் என்னும் பெயர் பெற்றது. இலங்கையின் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் இம்மன்னன் ஆட்சியில் பொலநறுவைக்கு இடம் மாற்றப்பட்டதோடு, இராசராசசோழனின் விருதுப் பெயர்களில் ஒன்றினை நினைவு கூறும் வகையில் “ஜனநாதமங்கலம்” என்னும் பெயரும் அந்நகருக்குச் சூட்டப்பட்டது. அதன் பின்பு மாதோட்டம், பதவியா, திருகோணமலை ஆகிய இடங்களிலும் இம்மன்னின் ஆதிக்கம் நிலைபெற்றிருந்தது. இது பற்றிய குறிப்புகள் தஞ்சைப்பெருவுடையார் கோயிலிலுமுள்ள அவனுடைய சாசனங்கள் மூலமாகவும், முற்குறிப்பிட்ட இடங்களில் கிடைத்துள்ள சாசனங்கள் மூலமாகவும் அறியமுடிகின்றன.

இராசராச சோழனைத் தொடர்ந்து இராசேந்திரனின் 36 ஆம் ஆட்சி ஆண்டில் (1017) இலங்கை முழுவதும் சோழர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. **“கங்கை கொண்ட சோழன்”, “கடாரம் கொண்ட சோழன்”** என்று சிறப்புப் பெயர்களைப் பெற்ற இம்மன்னன் இலங்கையில் பொலநறுவை, பதவியா, மாதோட்டம், திருகோணமலை ஆகிய இடங்களில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தியிருந்தான். இதற்கு அங்கு கிடைத்துள்ள சாசனங்கள் சான்று பகர்கின்றன.

இவ்வாறு சோழர்கள் ஈழநாட்டைச் சோழ மண்டலங்களி



லொன்றாக இணைத்ததோடு, அதன் நிர்வாக அமைப்பினையும், தமிழக அமைப்பினைப் போன்று ஊர், நாடு, வளநாடு, மண்டலம் என்று பிரித்து நிர்வகித்தனர். ஒவ்வொரு மண்டலமும் பல வள நாடுகளாகவும், ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகவும் பிரிக்கப்பட்டன. இந்நிலையில் ஈழமான மும்முடிச்சோழமண்டலம் இராசராச வளநாடு, இராசேந்திர வளநாடு, விக்கிரம சோழ வளநாடு, வீரபர கேசரி வளநாடு, அபயாச சிரய வளநாடு என ஐந்து வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டது. அவற்றிலே நிர்வாகப் பொறுப்புக்களை மேற்கொண்ட சோழப்

பிரதானிகளும், வணிககணங்கள், போர்வீரர்கள், பிராமணர்கள் முதலானோரும் ஈழநாட்டின் பல்வேறு ஊர்களிலும், நகரங்களிலும் குடியேறி அரசியல், வாணிபம், சமயம், கலை முதலான துறைகள் செழித்தோங்க ஆதரவுகள் நல்கினர். இவ்வாறு இலங்கையில் சோழராதிக்கம் விரிவு பெற்றது.

## சைவக்கோயில்கள்

சோழர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சைவசமயநெறியும் அது சார்ந்த ஆலய வழிபாட்டு முறைகளும் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருந்தன. தமிழ்நாட்டில் நாயன்மார்களால் பாடல் பெற்ற தலங்கள் கற்றளிகளாகப் புனரமைப்புச் செய்யப்பட்டதோ அதே பாணியைச் சோழர்கள் ஈழத்தில் பாடல் பெற்ற திருக்கோணச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய திருத்தலங்களுக்கும் புரிந்தார்கள். சோழர்கள் சைவசமயத்தின் மீது கொண்ட பற்று, போரில் கிடைத்த வெற்றி ஆகிய காரணத்தால் தமிழ்நாட்டிலும் அயல் நாட்டிலும் எவ்வாறு சைவக்கோயில்களை எழுப்பினார்களோ அதேபோல் இலங்கையிலும் பொலநறுவை, மண்டலகிரி, பதவியா, மாதோட்டம், குருநாகல், திருகோணமலை, கந்தளாய் முதலான இடங்களில் கற்றளி அமைப்பில் சைவாலயங்களை எழுப்பினார்கள்.

## பொலநறுவை

ஈழத்திருநாட்டில் புலத்தி நகரமான பொலநறுவை சோழராட்சிக் காலத்தில் ஜனநாதமங்கலம் என்ற பெயர் பெற்று இராசதானியாகவும் அவர்களின் நிர்வாக நிலையமாகவும் விளங்கியது. இங்கு தென்னிந்தியாவிலிருந்து சென்ற அரச அதிகாரிகள், படையினர், வணிகர், தொழில் வினைஞர், சிற்பிகள், அந்தணர்கள் எனப் பல்வேறு சமூகப் பிரிவினர்களும் அங்கு வாழ்ந்து வரும் காலத்தில் அவர்களின் வழிபாட்டுத் தேவைக்கேற்ப சைவ, வைணவ அம்மன் கோயில்கள் பதினாறுக்கு மேற்பட்டதாக அமைக்கப்பட்டன. அக்கோயில்களின் கட்டடப்பாணி, அமைப்பு, சிற்பம், சாசனங்கள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு இனங்கண்ட பொழுது **2**ஆம், **5**ஆம், **6**ஆம் என்று இலக்கமிடப்பட்ட சிவாலயங்கள் சோழர் காலத்துக்குரியவை என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றின் அழிபாடுகளும் அவற்றின் வளாகங்களிலே கிடைத்துள்ள படிமங்களும் பொலநறுவைக் காலத்துத் தொல்பொருட் சின்னங்களில் மிகவும் பழைமையானவை.

பொலநறுவைச் சிவன் கோயில்களுள் அழிவுறாது இன்றும் சீரான நிலையில் அமைந்திருப்பது இரண்டாம் சிவாலயமாகிய வானவன் மாதேவி ஈச்சரமாகும். இக்கோயில் முதலாம் இராசராச அரசனின் பட்டத்தரசியாகிய வானவன் மாதேவியின் பெயரில் கட்டப்பட்டதாகும். "இன்று பொலநறுவையில் காணப்படும் கட்டடங்களில் காலத்தால் பழையது மட்டுமன்றி ஈழத்திலுள்ள திராவிடக் கட்டடக்கலையின் சிறப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குவது இவ்வாலயமாகும்". என கோயிலின் கலைச் சிறப்பை எஸ்.பரணவிதான அவர்கள் விதந்துரைத்துள்ளார். இக் கோயிலிலே இராசேந்திர சோழனதும், அதிராசேந்திர சோழனதும் கல்வெட்டு சாசனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் இராசேந்திர சோழனது கல்வெட்டில் அவரைப் பற்றிய மெய்க்கீர்த்திகள் மட்டுமே உள்ளன. ஆலயம் பற்றிய செய்திகள் அழிந்து விட்டன. அதிராசேந்திர சோழனுடைய கல்வெட்டில் கோயிலின் நிர்வாக ஒழுங்குகள் குறித்து எழுதப்பட்டுள்ளது. அதில் பன்மாகேசுவரர் என்ற சிவ அடியார்கள் கூட்டம் பற்றியும், தில்லை நாயகப்பட்டன், பதிபாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாரியர் பற்றியும், பரிசாரகர் மற்றும் மாணிக்கம் என்றும் பட்டம்பெற்ற தேவரடியார்கள் பற்றியும் ஆலயத்திற்கு வழங்கப்பட்ட மானியங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சாசனத் தகவல்படி தென்னிந்தியக் கோயில்களின் நடைமுறை இக்கோயிலில் நடைபெற்றிருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## மண்டலகிரி

பொலநறுவைக்கு அண்மையில் உள்ள இடமாகும். மண்டலகிரியை முன்னோர் விநோதபுரம் என்று கூறுவர். இங்கு முதலாம் இராசேந்திர சோழனின் ஆதிக்கம் நிலைப்பெற்றதிற்கு அமைவாக



அவனின் விருதுப் பெயர்களில் ஒன்றான **"பண்டித சோழன்"** என்ற பெயரில் பண்டித சோழ ஈசுவரம் கட்டப்பட்டுள்ளது. சோழப்படைப்பிரிவைச் சேர்ந்த பிடான் சாவான் என்பவன் இக்கோயிலுக்கு ஒரு நொந்தா விளக்கினையும், இருபத்தாறு பசுக்களையும் தானமாக அளித்தான் என்று இங்கு கண்டெடுக்கப்பட்ட இராசேந்திரசோழனின் காலத்து சாசனம் குறிப்பிடுகின்றது.

## பதவியா

பொலநறுவை காலத்தில் பதவியா ஒரு பெருநகராக வளர்ச்சியுற்று அமைந்திருந்தது. பதினொராம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை இலங்கையில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட நகரப்பட்டனமாகும். இந்நகரைச் ஸ்ரீபதி கிராமம் என்றும் அழைத்தனர். இது அநுராதபுர மாவட்டத்தில் உள்ளது. இங்கு புகழ் பெற்ற தமிழ் தென்னிந்திய வணிகர்களான நானா தேசியர், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், நகரத்தார் முதலானோரும் வீரக்கொடியர் என்னும் படைப்பிரிவினரும், பேரிளமையார் என்னும் சமூகத்தவரும் வாழ்ந்து பதவியாவை வணிகநகரமாக மேம்படுத்தினர். அது மட்டுமன்றி சைவசமயம் சார்ந்த கோயில்களையும் அமைத்து அங்கு சமய வழிபாட்டு நெறிகளையும், கோயில் பண்பாடு சார்ந்த வழக்கங்களையும் பேணி விருத்தி பெறச் செய்தனர்.

*1891 இலும் 1961 இலும்* பதவியாவில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சிகளின் பயனாக ஐந்து சிவாலயங்களும், ஒரு காளி கோயிலும், ஐந்து கல்வெட்டுக்களும், சைவசமயச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட வெண்கல முத்திரையொன்றும், கடவுளர் படிமங்கள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டன. அவை பெரும்பாலும் சோழர் காலத்தைப் பிரதிபலிப்பனவாகவே காணப்படுகின்றன.

பதவியாவில் அமைந்துள்ள முதலாம் சிவாலயம் இரவி குலமாணிக்க ஈசுவரம் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது. இரவிகுலமாணிக்கம் என்பது முதலாம் இராசராசனின் விருதுப்பெயர்களில் ஒன்றாகும். இவ் ஆலயத்தை நாராயணன், திருமால், அழகன், துணைச்செட்டி, அப்பன் முதலானோர் சேர்ந்து அத்திவாரம் இட்டுக் கட்டினர் என்று ஒரு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் வணிக நகரத்து சாசனம் ஒன்றிலே ஏழு நொந்தா விளக்குகளும், ஐந்து சந்தி விளக்குகளும், இரண்டு எறி மணிகளும், பொற்காசுகளும், மானியங்களும் இக் கோயிலுக்கு அரச அதிகாரிகளாலும், வணிக கணங்களாலும் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பதவியாவிலிருந்த இவ் ஈசுவரம் ஐந்நூற்றுவரின் அதிகாரத்தில் இருந்த பொழுது அவர்களின் ஆதரவையும், பெற்றிருந்தது. இதற்கும் பல சாசனங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் இரு சாசனங்கள் மட்டும் சோழராட்சிக்குப் பிந்திய காலத்திற்குரியவை ஆகும்.

பதவியாவில் அழிவடைந்துள்ள மற்றுமொரு கோயிலை மூன்றாம் சிவாலயம் என்று அடையாளப்படுத்தியுள்ளனர். இங்கு *16* வரிகளில் எழுதப்பெற்றுள்ள தமிழ்ச்சாசனம் ஒன்று கிடைத்துள்ளது. அச்சாசனப்படி **"உத்தமனான சிவபெருமானுக்கு வலகழி என்னுஞ் சீரான புதிய திருத்தலத்திலே தினம்தோறும் ஆலய தர்மங்கள் விதிப்படியே நடத்தும் உணர்வோடு விசையராமப் பேரிளமைப்பாரின் என்னுங் கணத்தவரின் கோயிலாக அமைந்திருந்தது"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(தொடரும்...)

திருச்சிற்றம்பலம்

**படங்கள் - பிரவீன் நகுலேஸ்வரன்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முறைசெய்வோம்"**

### முதுகுன்றத்தில் பன்னீராயிரம் பொன் பெற்று ஆற்றிலிட்ட அற்புத நிகழ்வு

சுந்தரர் கூடலையாற்றூரரை வணங்கிப் போற்றிய பின் திருமுதுகுன்றத்தினைச் சென்றடைகின்றார், ஆலயத்தினை வலமாக வந்து வணங்கி உட்புகுந்துத் திருச்சன்னிதியில் விருத்தகிரீசுவரப் பரம்பொருளைக் கண்களார வழிபட்டு, நிலமிசை வீழ்ந்துப் பணிந்துப் பின் பொன் வேண்டும் குறிப் புடன் '**நஞ்சியிடை**' எனும் திருப்பதிகத்தினால், '**முதுகுன்றுறைப் பெருமானே, உம்மை மன வாக்கு காயங்களினால் வணங்கும் மெய்யடியார், தங்களது விண்ணப்பங்கள் உம்முடைய திரு வருளால் இன்று கைகூடும் நாளை சித்திக்கும் என்று எதிர் பார்ப்புடன் காத்திருந்துப் பின் அந்நிலையிலேயே இறந்தும் விட்டால் அதன் பின்னர் நீர் அவர்களுக்கு அருள்வதற்கு யாது உளது? ஆதலின் விரைந்து அருள் புரிவீர்**' என்று நயம்பட விண்ணப்பித்துப் போற்றுகின்றார்.

**நஞ்சி இடைஇன்று நாளையென்று உம்மை நச்சுவார்
துஞ்சியிட்டால் பின்னைச் செய்வதென் அடிகேள்சொலீர்
பஞ்சியிடப் புட்டில் கீறுமோ பணியீர் அருள்
முஞ்சியிடைச்சங்கம் ஆர்க்கும் சீர்முதுகுன்றரே
- (திருமுதுகுன்றம் - சுந்தரர் தேவாரம்: திருப்பாடல் 1)**

முதுகுன்ற இறைவர் பொருளை அருளவிருக்கிறார் என் பதனைத் திருவருட் குறிப்பினால் உணரப் பெறும் தம்பி ரான் தோழர் அகம் குளிர்ந்து, '**மெய்யை முற்றப் பொடிப் பூசி யோர் நம்பி**' எனும் மற்றுமொரு திருப்பதிகத்தினால் '**எழு பிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே**' என்று போற்றுகின்றார்,

**நாதர்பால் பொருள்தாம் வேண்டி நண்ணிய வண்ணமெல்லாம்
கோதறு மனத்துள் கொண்ட குறிப்பொடும் பரவும் போது
தாதவிழ் கொன்றை வேய்ந்தார் தரஅருள் பெறுவார் சைவ
வேதியர் தலைவர் மீண்டும் மெய்யில் வெண்பொடியும் பாட
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 106)**

**மெய்யை முற்றப்பொடிப் பூசியொர் நம்பி வேதம் நான்கும் விரித்தோதியொர் நம்பி
கையில் ஓர் வெண்மழு ஏந்தியொர் நம்பி கண்ணும் மூன்றுடையான் ஒரு நம்பி
செய்யநம் பிசிறு செஞ்சடை நம்பி திரிபுரம் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்த நம்பி என்னை ஆளுடை நம்பி எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே
- (திருமுதுகுன்றம் - சுந்தரர் தேவாரம்: திருப்பாடல் 1)**

# கானாட்டுமுள்ளூர்



குளிர்பிறை அணிந்தருளும் செஞ்சடைக் கடவுள் வன்தொண்டரின் தீந்தமிழ்ப் பனுவல்களால் திருவுள்ளம் மிக மகிழ்ந்துப் பன்னீராயிரம் பொன்னினை அளித்தருள் புரிகின்றார். பெரிதும் மகிழும் சுந்தரனார் மீண்டுமொரு முறை நிலமிசை வீழ்ந்துப் பணிந்தெழுந்து, சிவலிங்கத் திருமேனிக்கு இன்னமும் அருகாகச் சென்று **'பெருமானே, தாம் அருளியுள்ள இப்பொற்குவியல்களைத் திருவாரூரிலுள்ளோர் யாவரும் அதிசயிக்குமாறு அவ்விடத்தில் வருவித்துத் தருதல் வேண்டும்'** என்று விண்ணப்பிக்கின்றார். முதுகுன்றம் மேவும் மணிகண்டரும் விண்ணொலியாய் **'ஆரூரனே! இப்பொருளை இங்குள்ள மணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் பெற்றுக் கொள்வாய்'** என்று அருள் புரிகின்றார்.

**அருளும் இக்கனகமெல்லாம் அடியனேற்கு ஆரூருள்ளோர்**
**மருளுற வியப்ப அங்கே வரப்பெற வேண்டும் என்னத்**
**தெருளுற எழுந்த வாக்கால் செழுமணி முத்தாற்றிட்டிப்**
**பொருளினை முழுதும் ஆரூர்க் குளத்திற்போய்க் கொள்க என்றார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 108)**

### கானாட்டுமுள்ளூரில் எதிர்க்காட்சி

ஆலயத்தினை அடையுமுன்னரே, அத்தலத்துறை இறைவர் (பிறிதொரு வடிவில் தோன்றாமல்) தன் சுயவடிவிலேயே திருக்காட்சி தந்தருளும் நிகழ்வினை **'எதிர்க்காட்சி'** என்பர். வன்தொண்டருக்கு நான்கு திருத்தலங்களில் இவ்விதமான திருக்காட்சி கிடைக்கப் பெற்றுள்ளதாகப் பெரிய புராணம் பறைசாற்றுகின்றது, அவை முறையே சீர்காழித் தல எல்லையில் திருப்பனையூர் கானாட்டுமுள்ளூர் மற்றும் திருக்கோலக்கா.

தம்பிரான் தோழர், தல யாத்திரையாகச் செல்லும் வழியில், காவிரியின் வடகரையிலுள்ள கானாட்டுமுள்ளூர் எனும் திருத்தலத்தினைச் சென்றடைகின்றார். சோலைகளால் சூழப்பெற்று, செந்நெற் பயிர்கள் விளைந்திருக்கும் பசுமையான வயல்களினூடே நடந்தவாறு அங்குள்ள சிவாலயம் நோக்கிச் செல்லுகையில், தல இறைவரான பதஞ்சலிநாதப் பரம்பொருள் எதிர்க்காட்சி தந்தருள் புரிகின்றார். நம்பியாரூரர் உளமுருகிப்பணிந்து **'கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே'** எனும் பனுவலினால் மறைமுதல் வரைப் போற்றி செய்கின்றார்,

**கானாட்டுமுள்ளூரரைச் சாரும் போது கண்ணுதலார் எதிர்காட்சி கொடுப்பக் கண்டு**
**தூநாள்மென் மலர்க்கொன்றைச் சடையார் செய்ய துணைப்பாத மலர்கண்டு தொழுதேனென்று**
**வானாளும் திருப்பதிகம் வள்வாய் என்னும் வண்தமிழின் தொடைமாலை மலரச் சாத்தித்**
**தேனாரும் மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த திருஎதிர்கொள்பாடியினை எய்தச் செல்வார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 120)**

**வள்வாய மதிமிளிரும் வளர் சடையினானை**
**மறையவனை வாய்மொழியை வானவர் தம்கோனைப்**
**புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கி உமிழ்ந்தானைப்**
**பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தினானை**
**முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று**
**மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்சூழ்**
**கள்வாய கருங்குவளை கண்வளரும் கழனிக்**
**கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே!!!**
**- (சுந்தரர் தேவாரம்: கானாட்டுமுள்ளூர் - திருப்பாடல் 1)**

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**சைவாலயங்கள் எவை? உமாதேவியார், முருகன் பிள்ளையார் கோயில்கள் சைவாலயங்களில் அடங்குமா? திருமால் கோயில்கள் சைவாலயங்களில் அடங்குமா?**

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

**“நீற்றினை நிறையப்பூசி நித்தல் ஆயிரம் பூக்கொண்டு ஏற்றுழி”** என்று திருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்வதில் இருந்தும், **“கரிய மேனி மிசை வெளிய நீறு சிறிதே யிடும் பெரிய கோலத் தடங்கண்ணன்”** என்று நம்மாழ்வார் திருமாலைப் பாடுவதிலிருந்தும் இராமனுசர் விசிட்டாத்வைத வைணவத்தைத் தாபிக்க முதல், திருமாலும் திருநீறு தாரணராகவே விளங்கியுள்ளார் என்பது முடிவாகும்.

திருமாலின்பாலான பத்தியால் அவருடைய திருவடிகளை வைணவர் தமது நெற்றியில் திருமண்ணாக அணிவதென்பது அவர்களுக்கு உவப்பாகலாம் ஆனால் திருமாலின் நெற்றிக்கே அவருடைய திருவடிகளைக் குறிக்கும் திருமண்ணை அணிவிப்பது திருமாலுக்குச் செய்யும் அவமேயாகும். வடகலை தென்கலை கௌடியம் என்று ஏராளமான வைணவ திருமண் வடிவங்கள் இருப்பதும் மனிதச்சேட்டையில் உருவானவொன்றே இஃதென்று புலப்படுத்தும்.

எனவே, இராமனுசர் காலத்திற்கு முதல் திருமாலும் சைவத்தெய்வமேயாகும். அம்மரபு ஈழநாட்டில் இன்றும் வழக்கில் உண்டு. இலங்கையில் திருமால் கோயில்களில் திருநீறு இக்காலம்வரையில் வழங்கப்பட்டுவருவதும், சிவாசாரிய அபிடேகம் எடுத்தோரே திருமால் கோயில் பூசகர்களாக விளங்குவதும் கண்கூடு. வல்லிபுர ஆழ்வார் கோயிலில் இக்காலம் வரையில் திருமுறைகளே ஓதப்படுவதும், பொன்னாலை திருமால் கோயிலில் பண்டு திருமாலுக்குத் திருநீறு அணிவிக்கப்பட்டதாகக் கூறும் முன்னோர் நூல்கள் வழக்கில் இருப்பதும், அடியேனின் பாட்டனார் காலத்தில் இக்கோயிலில் திருமுறைகளே ஓதப்பட்டதும் வரலாறு.

இக்காலத்தில், ஒருசிலர் அறியாமையால் வைணவ ஆகம முறைகளைப் புகுத்திவருவதும் கௌடிய வைணவராகிய ஹரே கிருஷ்ணாக்கூட்டம் இலங்கைத் திருமால் கோயில்களில் ஊடுருவிக் கோயில் நிர்வாகத்தாரை மூளைச்சலவை செய்து வைணவக்கோயிலாக மாற்றச் சதி செய்வதும் கண்கூடு. இவற்றையெல்லாம் நிறுத்துவதற்குச் சைவசமயத்தார் சமயத்தெளிவோடு நிற்பதும் சைவ அந்தணர் இவ்விசயத்தில் மிகவும் சிரத்தையோடு விளங்குவதும் வேண்டப்படுவதாகும். நீறில்லா நெற்றி பாழ் என்பது ஔவையார் அருள்வாக்கு மட்டுமன்று, வேதாந்தமாகிய உபநிடத வாக்கும் கூடவாம். திருமாலைப் பாழான நெற்றியோடு வேதசிவாகம மரபுகளைப் போற்றுவோர் ஒருபோதும் கொள்ளலாகாது என்பதுடன், அங்ஙனம் செய்தால் அஃது திருமாலுக்குச் செய்யும் அவமேயாக முடிவுறும். எனவே, சிவசம்பந்தமான திருமால் வழிபாடே ஈழத்துத் திருமால் வழிபாடென்க.

இலங்கையில் சத்திவழிபாடென்பது **“சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்”** என்னும் திருவருட்பயன் முதலிய சைவாகம வழியதேயாகும். பிள்ளையார் வழிபாடும் சிவபரத்துவவழியதேயாகும். நம்பியாண்டார் நம்பி பெருமானார், கபிலதேவ நாயனார் முதலியோரும் விநாயகர் அகவல் அருளிய ஔவையார் முதலியோரும் பிள்ளையாரைச் சிவவடிவாகவே அருளியுள்ளனர். தமிழ்மரபில் சிவத்திலிருந்து வேறாக உமாதேவியாரையோ பிள்ளையாரையோ முருகனையோ கொண்டதில்லை. உமாதேவியார் பிள்ளையார் முருகன் கோயில்கள் சிவாகமவழியே அமைக்கப்பட்டுவருவதுடன், சிவபரத்துவமே பேணப்படுவதும் விதியாகவுள்ளது. எனவே, இலங்கையில் ஒருசில புது ஊடுருவல்களைத் தவிர, யாவும் சைவாலயங்களேயாகும்.

இவ்வுண்மைகளை விளங்கிக்கொள்ளும் சமயஞானம் இல்லாதோர், இலங்கையில் கோயில்களை வகைப்படுத்தும்போது, வைணவக்கோயில்கள் கௌமாரக்கோயில்கள் என்று உழலுவர். சைவப்பெருஞ்சமயத்தை உடைக்கவேண்டும் என்று சதிசெய்வோர் இவ்வாறான போலிப்பகுப்புக்களைப் புகுத்துவதையே தம்தொழிலாகக் கொண்டு சிவபாதகஞ் செய்வர். வைணவம் தனிமதமாகப் பிறழுமுதல் விளங்கிய திருமால் கோயில்களை வைணவக்கோயில் என்பது வரலாற்றுப் பிறழ்வு. சிவபெருமானுக்குப் பரிவாரமாக விளங்கிய திருமாலையே ஒருசிலர் முழுமுதலாக வழிபடத் தொடங்கினர். அங்ஙனம் உருவான வழிபாட்டினருக்கு இராமனுசரால் விளைந்ததே தத்துவமயப்படுத்தப்பட்ட வைணவமதமாகும்.

**“மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க அணங்காயசோதித், தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லை திருச்சித்ரக்கூடஞ்சென்று சேர்மின்களே”** என்று தில்லை வாழ் அந்தணரே சிதம்பரத்தில் திருச்சித்திரகூடத் திருமாலுக்கும் பூசைசெய்ததாக ஆழ்வார் பாசுரம் குறிப்பதே இதற்குத் தக்க சான்றுமாம். எனவே சிவாலயம் வியாபகமாகவும் அவற்றில் திருமாலாதி தெய்வங்களுக்கு வழிபாட்டுக்கூடங்கள் சைவாகமவழியில் அடங்கி விளங்கியதும் விளக்கமுறும். இவ்வுண்மைகளை நுணுகி உணர்வோர், இலங்கைத் திருநாட்டில் விளங்கிவரும் பண்டைய திருமால் கோயில்கள் சைவாலயங்களே என்பதனை நன்கு தெளிவர். எனவே, சைவக்கோயில்களே உமாதேவியார் முருகன் பிள்ளையார் வைரவர் வீரபத்திரர் கோயில்களும் திருமாலாதி தெய்வங்களினதும் என்பது முடிவுறும். இக்கால ஊடுருவல்கள் யாவும் தமிழர் மரபுக்கு வேறென்று தள்ளவதே நல்லோர் கடனுமாம்.

**திருச்சிற்றம்பலம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# அறநெறிக் கல்வி சிறக்கட்டும்!

**‘என்றும் அன்பாய் வாழும் நெறி எது?’** என்ற கேள்விக்கு நம் சைவசமயத்தின் பதில் ஒன்றுதான் அது அறநெறி!

திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சைவப் பெரியோர்களின் வாழ்வு என நம் சமயத்தின் அத்தனை கூறுகளின் மையத்திலும் அறமே சிவமாக நின்று ஒளிர்கிறது. இன்றைக்கு நாம் நம் இளைய தலைமுறையினருக்கு ஆற்ற வேண்டிய தலையாய கடமை, அவர்களுக்குச் சைவத்தின், அறநெறி கல்வியின் முழுமையான ஞானத்தையும் வழங்குவதுதான். இது காலத்தின் கட்டாயம். சமுதாயத்தின் தேவை!

அறம் சைவத்தின் உயிரோட்டம் சைவசமயம் என்பது வெறும் கோயில்களிலும் உற்சவங்களிலும் நின்றுவிடவில்லை. அது அன்பு, ஈகை, வாய்மை, ஒப்புரவு (சமூக நல்லிணக்கம்) போன்ற விழுமியங்களை அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் ஒரு நெறியாகும்.

“உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்” என்றார் திருமூலர். இந்த உள் மனக்கோயிலைத் தூய்மையாக வைத்திருக்க உதவுவதே அறநெறி கல்வி.

இன்றைய உலகச் சூழலில், நம் குழந்தைகள் மதிப்பெண்களை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வளர்கிறார்கள். வாழ்க்கையின் ஆழமான அர்த்தம், மனித உறவுகளின் மேன்மை, சமுதாயப் பொறுப்புணர்வு ஆகியவை அவர்களுக்குச் சொல்லித் தரப்படுவதில்லை. இதன் விளைவுதான், கல்வியில் சிறந்து விளங்கியும், தனிப்பட்ட வாழ்வில் அமைதியை இழந்து, குழப்பத்துடனும் சுயநலத்துடனும் வாழும் ஒரு தலைமுறையைக் காண்கிறோம்.

அறநெறி கல்வியின் நோக்கம், அவர்களைப் பொருள் ஈட்டும் இயந்திரங்களாக அல்லாமல், நல்லுணர்வு கொண்ட மனிதர்களாக உருவாக்குவதே.

ஆன்மீக வேர்களுக்கான பாதுகாப்பு நம்முடைய சைவசமயத்தை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றால், வெறும் பூசை முறைகளையும், வரலாற்றையும் மட்டும் போதித்தால் போதாது. அந்தச் சமயத்தின் ஆதாரமான அறக்கருத்துகளை அவர்களின் உள்ளத்தில் ஆழமாக விதைக்க வேண்டும்.

பொறாமை, பேராசை போன்ற மன அழுக்குகளை நீக்குவதற்குப் “பிறன்பொருள் விரும்பாமை” என்ற அறம் வேண்டும்.அடுத்தவர்களை மதித்து, வேறுபாடுகளைக் கடந்து வாழ “ஒப்புரவு ஒழுகுதல்” என்ற அறம் வேண்டும். வாழ்வில் வரும் துன்பங்களை எதிர்கொள்ளச் சகிப்புத்தன்மை (பொறுமை) என்ற அறம் வேண்டும்.

இந்த உயர் குணங்களை, நமது திருக்குறள், நன்னெறிப் பாடல்கள், ஆத்திச்சூடி, சைவ சித்தாந்த அடிப்படை நூல்கள் போன்றவற்றின் மூலமாக அவர்களுக்குப் போதிக்க வேண்டும். இந்த அறக் கல்வியே, அவர்களைச் சிவனின் திருவடியை நோக்கிச் செலுத்தும் சக்தி வாய்ந்த ஆன்மீகப் பாதையாகும்.

**“அறத்தால் வருவதே இன்பம்”** என்ற நம் திருமறையின் உண்மையை உணர்த்தும் கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. சைவசமயம் தழைத்தோங்க, அதன் ஆன்மீகப் பயணம் தொடர, நம் இளைய தலைமுறை அறத்தை அடிப்படையாகக் கொண்ட வலுவான அடித்தளத்தைக் கொண்டிருப்பது அவசியம்.


அறநெறி கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, செயல்படத் தொடங்குவோம்! அறம் தழைக்கட்டும்! சிவம் செழிக்கட்டும்!

**திருச்சிற்றம்பலம்**

# மலைமலிந்த தோள் வள்ளல் மானக் கஞ்சாறன்



சுந்தரமூர்த்தி நாயனாரால் போற்றப்பட்ட மானக்கஞ்சாற நாயனார், கஞ்சாறூர் என்னும் வளம் மிகுந்த ஊரிலே, மன்னரின் சேனாதிபதியாக பதவி வகிக்கும் குடியில் தோற்றம் செய்தார். இவரும் பரம்பரை வழக்கப்படி சேனாதிபதியாக இருந்தாலும், விவசாயத்திலும் விளைச்சல் கண்டு செல்வ வளம் பொருந்தியவராக வாழ்ந்து வந்தார்.



செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

செல்வ வளம் மிக்கவராக இருந்தாலும், மெய்ப்பொருளான, சிவபெருமானை போற்றிப்புகழும் தீவிர பத்தரான இருந்தார். தம் செல்வத்தையெல்லாம் சிவனடியார்கள் கேட்பதற்கு முன்பே குறிப்பறிந்து கொடுக்கும் வண்மையாளராக விளங்கினார்.

**பணிவுடைய வடிவுடையார்**
**பணியினொடும் பனி மதியின்**
**அணிவுடைய சடைமுடியார்க்**
**காளாகும் பதம் பெற்ற**
**தணிவில் பேறுடையார்**
**தம்பெருமான் கழல் சார்ந்த**
**துணிவுடைய தொண்டர்க்கே**
**ஏவல் செய்யும் தொழில் பூண்டார்**

**(திருத்தொண்டர்புராணம் 12:18:8)**

என்று இவர் பெருமையைச் சேக்கிழார் பேசுவார்.

தான் ஈட்டிய பொருளையெல்லாம், சிவனடியார்களுக்காக தானதர்மம் செய்து சிறப்புடன் வாழ்ந்து வந்தாலும் ஒரே ஒரு

மனக்குறை இருந்து வந்தது. அதாவது அவருக்கு குழந்தைச் செல்வம் இல்லை. இதனால் அவர் சிவபெருமானை தினமும் தொழுது தனக்கு குழந்தை பாக்கியம் தர வேண்டி பிரார்த் தித்து, மிகவும் பணிவோடு சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து வந்தார். இறைவனின் அருளால் அவருக்கு பெண் குழந்தைப் பிறந்தது. அந்தக் குழந்தை ஒளி மிகுந்த பேரழ குடன் காணப்பட்டது. அந்தக் குழந்தையையும் சிவனின் மீது அன்பு கொண்டவளாகவே வளர்த்து வந்தார் மானக் கஞ்சாற நாயனார்.

மானக்கஞ்சாற நாயனாரின் மகள் வளர்ந்து திருமணப் பருவத்தை எட்டினாள். அவளுக்கு ஏற்ற மணமகனைத் தேடினார் அவளது தந்தை. இறுதியில் சேனாதிபதி குடியில் தோன்றிய ஏயர்கோன் கலிக்காமர் என்ற சிவனடியாரை, தனது செல்ல மகளுக்கு மணம் பேசி முடித்தார். திருமண நாள் வந்தது. கஞ்சாறு திருத்தலமே மணக்கோலமும், திரு விழாக் கோலமும் பூண்டிருந்தது. மணமகனாக கலிக்காமர் மணமுரசொலிக்க கஞ்சாறூர் எல்லையை வந்தடைந்தார். மணமகன் வந்த திருமண ஊர்வலம், கஞ்சாறு ஊருக்குள் நுழைவதற்குள், சிவபெருமான், மானக்கஞ்சாற நாயனாரின் வீட்டில் சிவனடியார் வேடத்தில் எழுந்தருளினார்.

திருமணப் பந்தலில் இருந்த சிவனடியாரின் அழகுத்திருக் கோலத்தை சேக்கிழார்,

**முண்ட நிறை நெற்றியின் மேல்**
**முண்டித்த திருமுடியில்**
**கொண்ட சிகை முச்சியின்கண்**
**கோத்தணிந்த என்பு மணி**
**பண்டொருவன் உடல் அங்கம்**
**பரித்த நாள் அது கடைந்த**
**வெந்தரளம் எனக் காதின்**
**மிசை அசையும் குண்டலமும்**

**(திருத்தொண்டர்புராணம் 12:18:22)**

என மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார். அதாவது நெற்றியில் திருநீற்றுப் பூச்சு, உச்சியில் குடுமி, காதில் வெண் முத்துக் குண்டலம், மார்பில் மயிர்க்கயிற்றுப் பூணூல், கையில் திருநீற்றுப் பை, பஞ்ச முத்திரை பதித்த திருவடி என்பதாக இருந்தது ஈசனின் சிவனடியார் வேடம். தனது மகளின் திருமணம் நடைபெறும் வேளையில், தன் வீட் டிற்கு சிவனடியார் ஒருவர் எழுந்தருளியதைக் கண்டு மனம் மகிழ்ந்து போனார் மானகஞ்சாற நாயனார்.

சிவனடியாரைக் கண்டவுடன் மானக்கஞ்சாற நாயனார் கைவேலையையும் விட்டு விட்டு ஓடோடி வந்தார். **“அடியேன் முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனாகத் தாங்கள் இங்கு வருகை தந்திருக்கிறீர். இதனால் என்னுடைய பாவங்கள் நீங்கின”** என்று சிவனடியாரைப் பணிந்தார். அவரிடம் சிவனடியார், **“இந்தத் திருமாளிகையில் நடக்கும் மங்கல காரியம் என்னவோ?”** என்று நாயனாரிடம் கேட்டார். **“என்னுடைய மகளின் திருமணம் நடக்கவிருக்கிறது.”** என்று சொல்ல சிவனடியார் **“உமக்குச் சோபனம் உண்டாகட்டும்”** என்று ஆசி வழங்கினார்.

மாறக்கஞ்சாறர் மணக்கோலத்திலிருந்த தன் மகளை அழைத்து வந்து சிவனடியாரைப் பணியச் செய்தார். தம்மைப் பணிந்த மணப் பெண்ணைப் பார்த்த சிவனடியார், நாய னாரிடம், **“இவளுடைய கூந்தலில் அடர்ந்து வளர்ந் திருக்கும் மயிர்கள் எமக்குப் பஞ்ச வடிக்கு (மயிர்கற்றை யால் செய்யப்படும் பூணூல்) ஆகும்”** என்றார். இதைக் கேட்ட மானக்கஞ்சார நாயனார், சிவனடியார் ஆசைப்பட்டு விட்டதை கொடுக்கும் பொருட்டு, அருகில் இருந்த கத் தியை எடுத்து, தனது மகளின் நீண்ட கூந்தலை அடியோடு அரிந்து அடியவரிடம் கொடுத்தார்.

அதனை வாங்கச் சென்ற அடியவர், அப்படியே மறைந்து இடப வாகனத்தில் அம்மையப்பராக காட்சி கொடுத்-தார். அதைக் கண்டு மானக்கஞ்சாறர் மற்றும் ஊர் மக்கள் அனைவரும் உள்ளம் நெகிழ்ந்தனர். **‘கஞ்சாறரே! நீர் என் மீது வைத்துள்ள மெய்யன்பை உலகம் அறியச் செய்யவே, யாம் வந்தோம்’** என்று கூறி மறைந்தார். கஞ்சாறருக்கு அருள் செய்து இறைவன் மறைந்த நேரத்தில், ஏயர்கோன் கலிக்காமர் மணமகளைக் கைப்பிடிக்க வந்து சேர்ந்தார். அவர் அங்கு நிகழ்ந்த அற்புதத்தைக் கேட்டறிந்தார். அவ்வற்புதத்தைக் காணாமல் போனதை எண்ணி மனம் தளர்ந்தார். பின்னர் இறைவனின் அருள்மொழியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார். தொடர்ந்து இறைவனின் அருளால் வெட்டப்பட்ட நீண்ட கூந்தல், மீண்டும் வளரப் பெற்ற மானக்கஞ்சாற நாயனாரின் மகளை மணந்து இறை தொண்டு புரிந்து வந்தார்.

தனது வாழ்வியலூடாக முடி தானம் செய்யலாம் என்பதையும், இறையடியார் எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாது நாம் எம் கைங்கரியங்களைச் செய்தால் தக்க தருணத்தில் இறைவன் கருணை புரிவார் என்பதையும், தந்தையின் தொண்டுக்காக துணை போகுமளவிற்கு தன் மகளை வளர்த்திருக்கின்றார் என்பதையும் தன் வாழ்விய லூடாக இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டி மார்கழி சுவாதி திருநாளில் இறைவனடி சேர்ந்தவர் மானக்கஞ்சாற நாயனார்.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு ஞானாம்பிகை உடனுறை வீரட்டேசுவரர் - திருக்குறுக்கை (கொருக்கை)

## தேவாரப் பாடல்பெற்ற 276 சிவபுரங்களில் 26 ஆவது திருக்கோயில் திருக்குறுக்கை (கொருக்கை)

**"நிறைகடன் மண்ணும் விண்ணும் நீண்டவானு லகுமெல்லாம்
குறைவறக் கொடுப்பர்போலும் குறுக்கை வீரட்டனாரே"**

எட்டு வீரட்டத்தலங்களுள் இறைவனார் காமனைத் தகித்த இடமாதலின் காமதகனபுரம் என பெயர்பெற்ற அற்புதத் தலமே அருள்மிகு ஞானாம்பிகை உடனுறை வீரட்டேசுவரர் உறையும் திருக்குறுக்கை (கொருக்கை) திருத்தலம்.

**அமைவிடம்: மயிலாடுதுறை, தமிழ்நாடு.**

நாகை மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் மயிலாடுதுறைக்கு வடக்கேயுள்ள நீடூர் புகைவண்டி நிலயத்திலுருந்து வட மேற்கே சுமார் 8. கி.மீ. தொலைவில் விளங்குகிறது.

**இறைவர் திருப்பெயர்: வீரட்டேசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்: ஞானாம்பிகை.**
**கோயில் மரம்: கடுக்காய் மரம்**
**தீர்த்தம்: சூல தீர்த்தம். ஞான தீர்த்தம்**
**வழிபட்டோர்: அப்பர், சுந்தரர், சேக்கிழார், இலக்குமி, திருமால், பிரமன், முருகன், ரதி ஆகியோர்**
**பாமாலை: அப்பர், சேக்கிழார்.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**
**சுந்தரர் அருளிய திருப்பதிகம்**

**நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ்செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டும் அந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநாள் அற்றதென்று தருமராசற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர்போலும் குறுக்கை வீரட்டனாரே
. (04-49-2)**

**நெடியமால் பிரம னோடு நீரெனும் பிலயங் கொள்ள
அடியொடு முடியுங் காணா ரருச்சுனற் கம்பும் வில்லும்
துடியுடை வேட ராகித் தூயமந் திரங்கள் சொல்லிக்
கொடிநெடுந் தேர்கொ டுத்தார் குறுக்கை வீ ட்டனாரே.
- (04-50-01)**

**சேக்கிழார் பாடல் குறிப்பு**

**ஆண்டஅர செழுந்தருளக் கோலக் காவை
அவரோடும் சென்றிறைஞ்சி அன்பு கொண்டு
மீண்டருளி னார்அவரும் விடைகொண் டிப்பால்
வேதநா யகர்விரும்பும் பதிக ளான
நீண்டகருப் பறியலூர் புன்கூர் நீடூர்
நீடுதிருக் குறுக்கைதிரு நின்றி யூரும்
காண்தகைய நனிபள்ளி முதலா நண்ணிக்
கண்ணுதலார் கழல்தொழுது வணங்கிச் செல்வார்.
- (12-21-189)**



**திருத்தலச் சிறப்பு**

சைவ சமய மரபில் எண் வீரட்டத் தலங்களுள் முக்கிய இடம் பெற்றது குறுக்கைத் திருத்தலம். பல்வேறு புராணச் சம்பவங்களால் சிறப்புறும் இத்தலம், மக்கள் வழக்கில் **'கொருக்கை'** என அழைக்கப்படுகிறது.

இத்தலத்தில் இறைவன் உமையம்மையாரைப் பிரிந்து யோகம் செய்ததால் யோகீசபுரம் எனப் பெயர் பெற்றது. காமனை எரித்த பெருமையால் காமதகனபுரம், இலக்குமியின் நடுக்கத்தை நீக்கியதனால் கம்பகரபுரம் என்றும் அழைக்கப் படுகிறது. தீர்க்கவாகு முனிவர் கங்கை நீரைப் பெறும் போது, கரங்கள் குறுகியதால் பின்னர் **"குறுக்கை"** எனப் பரவலாக அறியப்பட்டது.

எண்வீரட்டச் சபைகளுள், இத்தலச் சபை காமனங்க நாசனி சபை எனப் போற்றப்படுகிறது. குறுங்கை விநாயகர் எழுந்தருளி பத்தர்களுக்கு வேண்டிய அனைத்துப் பேறுகளையும் வழங்குகிறார். புராண வரலாறுகளின்படி, இத்-தலத்தில் முருகன் சூலாயுதம் பெற்றார் இராகவன் பிதிர் கடனை ஆற்றினார் பிரமன் வழிபட்டு மீண்டும் படைப்புத் தொழிலைப் பெற்றார் வாணாசுரனுக்கு அஞ்சிய திருமாலுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டது.

தீர்க்கவாகு முனிவர் தம் கரங்கள் குறுகியபோது இறைவன் அருளால் குறை நீங்கியது பற்றிய வரலாறே இத்தலத்தின் தனித்துவமாகும். இவ்வாறான பெருமைகளால் குறுக்கை, பத்தர்களின் வேண்டுகோளுக்கு அருள் தரும் புண்ணியத் தலமாகச் சிறப்பிக்கப்படுகிறது.




## திருத்தல வரலாறு

எண்வீரட்டத் தலங்களுள் இத்தலம் **'காமதகனம்'** என்ற பெருமையால் புகழ்பெற்றது. உலகத்தைக் காப்பாற்றும் அம்மையும் அப்பரும் யோகத்தில் திளைத்திருந்தபோது, மக்கள் காமநுகர்ச்சியை மறந்து துறவியர்களைப் போல வாழ்ந்தனர். அந்தக் காலத்தில் சிங்கமுகன், தாரகன் போன்ற அசுரர்கள் வானுலகத்தைக் கைப்பற்றி, தேவர்களைத் துன்புறுத்தினர். அவ்விதமான சூழலில் வியாழபகவானின் அறிவுரையின்படி, தேவர்கள் காமதேவனையும் இரதியையும் அணுகி, இறைவனை யோகத்தில் இருந்து கலைக்கச் செய்ய வேண்டினர்.

முதலில் தயங்கிய காமன், தேவர்களின் வேண்டுகோளை ஏற்று, இரதியுடன் குறுக்கைத் தலத்துக்கு வந்தார். கரும்பு வில்லில் மலர்ப் பாணம் வைத்து இறைவனிடம் எய்தார். அதே சமயம், கோபமடைந்த இறைவன் நெற்றிக் கண்ணைத் திறந்து, அதிலிருந்து வெளிவந்த நெருப்பால் காமன் எரிந்து சாம்பலானான். துயருற்ற இரதி, கணவன் உயிர் பெற வேண்டுமென இறைவனை நோக்கி விண்ணப்பித்தாள். அவள் வேண்டுகோளை ஏற்று, இறைவன் காமனை உயிர்ப்பித்து அருளினார். ஆனால், காமன் அனைவருக்கும் அருவமாகவும், இரதிக்கு மட்டும் உருவமாகவும் தோன்றுவதாகக் கருணை வழங்கினார். இதன் பின்னர் காமன் **'அநங்கன்'** என அழைக்கப் பட்டார். **"ஆடல் அநங்கனை அமுது செய்த செங்கணான் இருக்கை ஈது"** என்பது திருவிளையாடற்புராணத் தொடர்.

இத்தலத்தில் தீர்க்கவாகு முனிவர் சம்பவமும் சிறப்புடையது. இறைவனை நீராட்ட ஆகாய கங்கை நீரை அள்ள முனைந்தபோது, அவரது நீண்ட கரங்கள் திடீரெனக் குறுகின. தன் பத்தியில் குறை ஏற்பட்டதென எண்ணி, கல்லில் தலையை மோதிக்கொள்ள முனைந்தார். அப்போது இறைவன் அருள்கொண்டு காட்சி தந்து, முனிவரின் குறையை நீக்கினார். இந்தச் சம்பவத்தால் முனிவர் குறுங்கை முனிவர் எனவும், இத்தலம் **"குறுக்கை"** எனவும் பெயர் பெற்றது.

மேலும், சோழ அரசன் சயத்துவசனும், இலக்குமி தேவியும், அகத்திய முனிவரும் இத்தலத்தில் வழிபட்டு, தெய்வ அருளைப் பெற்றதாகத் தல வரலாறு கூறுகிறது.

## திருக்கோயில் அமைப்பு

இத்திருக்கோயில் ஐந்து நிலைகளையுடைய இராச கோபுரத்துடன் எழுந்தருளியுள்ளது. கோபுரத்தில் பைரவர், தென்முகக்கடவுள் (தட்சிணாமூர்த்தி), சதாசிவர் போன்ற தெய்வச் சிற்பங்களுடன், பன்றி, யானை, நரசிம்மம், மனிதன் என நான்கு முகங்களைக் கொண்ட அரிய உருவச் சிற்பமும் காணக்கிடைக்கிறது. கோபுரத்துக்கு எதிரே சூல தீர்த்தம் அமைந்துள்ளது.

உள் நுழைந்தவுடன் வாயில் விநாயகர், சுப்பிரமணியர் காட்சியளிக்கின்றனர். வெளிச்சுற்றில் சந்நிதிகள் இல்லை நந்தியும் பலிபீடமும் மட்டுமே உள்ளன. வௌவால் மண்டபத்தில், தெற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் ஞானாம்பிகை அம்மன் சந்நிதி உள்ளது. அடுத்து வள்ளி, தெய்வயானை சுப்பிரமணியர், வேழத்திரு (கஜலட்சுமி) ஆகிய சந்நிதிகளைக் காணலாம். தலமூர்த்தியான காமதகன மூர்த்தி அபயமுத்திரையுடன் அமர்ந்த கோலத்தில் எழுந்தருளியுள்ளார். பக்கத்தில் உமையம்மையும், எதிரே இரதி, மன்மதர் எழுந்தருளல் திருமேனிகளும், சனகாதி முனிவர்களும் உள்ளனர்.

உள் வீதியில் தலமரமாக கடுக்கா மரம் காணப்படுகிறது. குறுங்கை விநாயகர் சந்நிதியில் தீர்க்கவாகு முனிவரின் உருவமும் உளது. சோககரேசுவரர், துர்க்கை, பிரமன், பெருஞ்சோதியான் (இலிங்கோற்பவர்), நடன விநாயகர் முதலிய சுற்றுத் திருமுன்களும் அமைந்துள்ளன. சண்டேசுவரர் தனி சந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

மேல் மண்டபத்தில் ஒன்பான்கோள்களும், நடராச சபையும் உள்ளன. இச் சபை **"சம்பு விநோத சபை"**, **"காமனங்கநாசனி சபை"** எனப் பெயர் பெற்றது. சிவகாமியும் மாணிக்கவாசகர் திருமேனிகளும் சபையில் உள்ளனர்.

உட்புற மூலவர் சுயம்புமூர்த்தி. சதுர ஆவுடையாரில் உயர்ந்த பாணமாக எழுந்தருளியுள்ள சுவாமியின் பீடத்தில், காமன் எய்திய பஞ்சபாணங்களுள் ஒன்றான தாமரை அம்பின் அடையாளம் பதிந்துள்ளது. இக்கோயிலில் நாட்தோறும் நான்கு கால பூசைகள் நடைபெறுகின்றன. திங்கள்தோறும், ஆண்டுதோறும் விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. சோழரும் விசயநகர மன்னர்களும் நிறுவிய கல்வெட்டுகள் இன்றும் இங்கு காணப்படுகின்றன.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**நகரச்சிறப்பு பாடல் - 08**

**உள்ள மாருரு காதவ ரூர்விடை**
**வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாந்**
**தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்**
**கிள்ளை பாடுவ, கேட்பன பூவைகள்**

**திருப்பதிகங்கள்:** சைவ சமய பரமாச்சாரியர்களான நான்கு பெருமக்களும் காரைக்காலம்மையாரும் அருளியவை. பெரும்பாலும் பத்துப் பாடல்களாகியதனால் பதிகம் எனப்பெற்றன. இப்பெயர் இப்பாடல்களுக்கே காரண இடுகுறியாக வழங்குவது உயர்ந்தோர் வழக்கு. உயர்ந் தோர் மரபின்மையால் ஏனையோர் பாடல்களுக்கு இப்பெயர் வழங்குதல் பொருந்தா என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் கூறியுள்ளார்கள்.



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**திருக்கோயில்:** திருவாயில் என்பன போல இவற்றிற்கும் திருப்பதிகங்கள் என்று உரைத்தலே மரபாம் என்று காட்டினார் ஆசிரியர்.

பதிகம் என்பதற்குச் சிவக்கவிமணி ஐயா அவர்கள் பொருள் சொல்கின்ற போது மெய்ப்பொருளைக் குறிக்கும் சொல் வடிவம் என்று கூறியுள்ளார்கள். திருமுறை என்பதற்குச் சிவக் கவிமணி ஐயா அவர்கள் முத்தித் திருவுக்கு ஏதுவாகிய ஞான நூல்கள் ஒன்று கூறியுள்ளார்கள்.

இவை சொல்வோர்க்கும், கேட்போருக்கும் வினை போகும் என்பதைப் பல இடங்களில் கூறியுள்ளார்கள்.

**பைங்கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்:** இக்கிள்ளையும் பூவையும் மக்கள் தத்தம் மாளிகை முதலியவற்றில் வளர்ப்பவை.

**'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை"** என்பது வழக்கு. **"பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசை கேட்டு, வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட் சொல்லும் மிழலையாம்"** (திருவீழிமிழலைத் தேவாரம்)

**"பண்மொழியால் அவன் நாமம் பலவோதப் பசுங் கிள்ளை வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே"** (திருஞான - தேவாரம்)

**பூவை:** நாகணவாய்ப்பறைவை மக்கள்பாற் கேட்டுப் பயின்ற வற்றைக் கிளிகள் பாட, அவ்வினத்தைச் சேர்ந்த பூவை கேட்பன என்றார்.

**"ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன் சீரான் திருநாமம்"** சொல்லுமாறு கேட்கின்ற கருத்து இங்கே கவனிக்கற்பாலது. அந்நாளில் ஆரூரில் எங்கும் அதிக மாகத் தேவாரப் பதிகங்களை மக்கள் பயின்று வந்தனர் என்பது இப்பாட்டின் உள்ளுறையாக உணரப்படும்.

திருஞானசம்பந்த நாயனார் முதலிய ஆசாரியன்மார் களின் காலத்து வேதத்து ஒலிகளும் வேதப் பொருளும் மிகப் பயிலப் பெற்றன என்றும், அதன் பிற்காலத்தே தெள்ளு

மோசைத் திருப்பதிகங்கள் மிக அதிகமாகப் பயிலப்பெற்றன என்றும்திருப்பதிகம்விண்ணப்பம்செய்வோரைச்சோழர்கள் கோயில்களில் நியோகித்ததும் கல்வெட்டுக்களால் அறிகின் றோம் என்றும் சிவக்கவிமணி ஐயா அவர்க்ள கூறியுள் ளார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தில்லைக்கு வரும்பொழுது சோலைகளில் இருந்த குயில்களும் பறவைகளும் அவர்தம் திருவடிவைக் கண்டு கூறியதைச் சேக்கிழார் பெருமான் **"அறிவில் பெரியவர் அயல்நெல்பணைவயல் அவை பிற்படும் வகை அணைகின்றார், பிறவிப்பகை நெறி விடுவீர் இருவினை பெருகித் தொடர்பிணி உறுபாசம் பறிவுற்றிட அணையுமின் எனக் குயில் கூவும்"** என்று போற்றுகின்றார்

**"இவர்தம் திருவடிவு அதுகண்டு அதிசயமென வந்து எதிர் அரகரவென்றே சிவமுன் பயின்மொழி பகர்கின்றனவளர் சிறைமென் கிளியொடு சிறு பூவை"** (திருநாவுக்கரசர் புராணம்)

## நகரச்சிறப்பு

**பாடல் 13**

**அன்ன தொன்னக ருக்கர சாயினான்**
**துன்னு வெங்கதி ரோன்வழித் தோன்றினான்**
**மன்னு சீரந பாயன் வழிமுதன்**
**மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே**

**பொருள் :** அத்தன்மைகளெல்லாம் பொருந்திய பழமை யான திருவாரூர்த் திருநகரத்திலே அரசனாய் வீற்றிருந் தான். நெருங்கிய வெங்கதிரவனாகிய சூரியனது மரபிலே தோன்றியவனும், நிலைபெற்ற சிறப்புடைய அநபாயச் சக்கரவத்தியின் வழியிலே முன்னவனும் ஆகிய விளங்கு கின்ற ஆபரணங்களை அணிந்த மனுவேந்தனேயாம்.

**வி-உரை : தொல் நகர் -** திருவாரூரைச் சொல்கின்றபோ தெல்லாம் ஆசிரியருக்கு அதன் தொன்மையே நினைவுக்கு வருகின்றது. தொன்மையில் திளைத்தல் தமிழர்களின் சிறப்பியல்புகளில் ஒன்றென்பது ஆசிரியர் குறிப்பு.

**துன்னு வெங்கதிரோன் வழித்தோன்றினான் -** சூரியன் வழித் தோன்றல் என்றது சோழர்கள் சூரியன் மரபினரா தலைக் குறிப்பிட்டதாம்.

**மன்னுசீர் அநபாயன் வழி முதல் -** மன்னுசீர் என்றது தம் அர சரை வாழ்த்தியவாறு நிகழ்காலத்து நிலைபெற்றி ருப்பதுடன் எதிர்காலத்தும் மன்னுசீர் என்பதாம். இஃது இப்புராணம் பாடக் காரணராயிருந்தது பற்றி இப்புவியரசர்க்குக் கவியரசர் காட்டும் நன்றியு மாம். சோழர்களது சரிதம் கூறும் இடங்களில் எல்லாம் ஆசிரியர்க்கு அநபாயரது நினைவு தோன்று கின்றது. புராணத்தில் அநபாயரைப் பற்றி 11 இடங்க ளில் ஆசிரியர் பாடியுள்ளார்.

**வழிமுதல் -** இது மனுவேந்தர் சிறப்பை அறிவிக்கும் ஒருவகை. ஆரூர்ச் சிறப்பை மனுச்சோழர் செய்தியினால் அறியவைக்கும் ஆசிரியர் அவ்வரசரது மரபுச் சிறப்பை அந்நாளின்' நிகழ்காலச் செய்தியாகிய அநபாயரது சிறப்பினால் அறிய வைத்தல் காரணமாகக் கொண்டு இங்கு மனுவேந்தரை அநபாயர் வழிமுதல் என்றார்.

**பாடல் - 14**

**மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாங்**
**கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்**
**விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்**
**எண்ணி லாதன மாண வியற்றினான்**

**பொருள் :** இந்நிலவுலகில் வாழும் எல்லா உயிர்களையும் கண்ணையும் உயிரையும் போலக் காவல் செய்தான். அம் மேலுலகில் விண்ணவர்க்கும் அவர் மகிழும்படி பல வேள்வி களைச் சிறப்பாகச் செய்தனன்

**வி-உரை : வாழ்தரு :** வாழும் கற்பகம். இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாம் கேட்டது கொடுக்கும் இயல்பு டைய அரசன் என்பது.

**உயிர்க்கெலாம் -** மனிதர்க்கே அன்றிநடப்பன பறப்பன முதலிய எல்லா உயிர்களுக்கும் வரும் துன்பம் போக்கிக் காவல் செய்தல் வேண்டும் என்பது நீதி. இதன் பொருட்டே தான் அரசு தாங்க நின்றபோது எல்லா உயிர்களும் பேசும் மொழிகளை அறியும் அறிவைக் கழறிற்றறிவார் நாயனார் இறைவனிடத்து வேண்டிப் பெற்றுக்கொண்டார் என்ப தும், அதனால் அப்பெயர் பெற்றனர் என்பது அறியலாம்.

**தொடரும்**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**




தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org

# If 100 Tamil Youth get Together

When the curtains opened for Twice Upon A Time, a bilingual drama production I directed, our community witnessed more than just a stage production. They witnessed the power of Tamil youth coming together with passion, discipline, and creativity. Over 100 young people collaborated, actors, dancers, singers, musicians, writers, technicians, and volunteers, with each playing their part to create something extraordinary.

For many, this was their first time performing on such a stage. For others, it was a chance to reconnect with their roots through storytelling. But for all of us, it was proof of what can happen when Tamil youth unite with purpose.

Too often, we hear that young people are disconnected from their heritage, or that our community struggles to bridge the gap between generations. This show would have challenged that narrative. The production was not just a retelling of history and culture; it was a reminder that our traditions are alive when the next generation chooses to own them.

This is more than a play. It is a blueprint.

If 100 youth can come together to write, rehearse, and perform a full-length Tamil-English production, complete with music, choreography, and set design, then ir raises a powerful question. What else are we capable of?

Imagine a Tamil Youth Festival, a celebration where young people showcase not only theatre but also music, art, film, debate, sports, and culture. Imagine a platform where our heritage and modern identity meet, where collaboration goes beyond performance into leadership and education.

Such a festival could become an annual tradition, something our community looks forward to, something that gives every Tamil youth a chance to be seen, to be heard, and to belong.

The success of Twice Upon A Time tells us something important. Our youth are ready. They are talented, resilient, and passionate. What they need is opportunity. When given that, they do not just rise to the occasion; they set new standards.

As a director, as a participant, and as a member of this community, I feel proud. But we cannot stop here. The energy we saw on stage must ripple outward. The teamwork, the long nights of rehearsals, the laughter and the struggles, these are seeds planted for something far greater.

Our parents' generation built temples, associations, and cultural centers. Our generation can build festivals, networks, and platforms that take Tamil identity to the world stage.

If Twice Upon A Time was a story of the past and present, then the festival we dream of can be the story of our future.

The stage is waiting.

# Saiva Saint Manakanjara Nayanar - The unhesitant



The eleventh among the sixty-three Nayanmars is Manakkanjarar of Kancharur, a Velalar chief whose life has been remembered for a decision that unsettled the very idea of kinship. If Kungiliya Kalayar taught that devotion must persist even through destitution, Manakkanjarar stands as the one who taught that no bond of blood and no ritual of honour could outrank fidelity to Sivaperuman.



Srisankarshan
Srisatkunarajah
English Editor
Thennadu

## Background

Kancharur in the Chola country produced a household where hospitality was the ruling ethic. Manakkanjarar welcomed Sivaperuman's devotees without hesitation, placing his resources at their disposal, a pattern we see too often in Tamil culture. His measure of wealth was not gold or land but the steadiness with which he served those who bore Sivaperuman's name. It was precisely in this strength, his generosity and attachment to the order of devotion, that he was tested quite simply to the point where one would

not even notice such a statement to be a test at all!

## The Trial at the Wedding

His daughter's wedding was an occasion where Tamil ritual displayed lineage, continuity, and dignity before the community. The bride sat adorned and veiled, her braided crown jeweled and perfumed, the coiffure itself treated as a signifier of honour. Into this setting stepped a devotee of Sivaperuman who asked not for grain, wealth, or ornament, but for the maiden's tresses to be severed and offered.

The demand cut to the centre of social order. To grant it meant shaming the bride and unsettling the rite. To refuse it meant turning away from a pathar. The Periyapuranam is careful here: Manakkanjarar does not deliberate, does not weigh outcomes. He acts. The braid is surrendered, and in that instant devotion prevails over fatherhood, and worldly honour is laid down at Sivaperuman's feet.

## Response that Bestowed Saintliness

The Periyapuranam notes that Sivaperuman restored the maiden's coiffure at once, more radiant than before, and the wedding could proceed in full dignity. What gives the moment its depth is not the restoration alone but the temper of those present. The groom, Eyarkon Kalikkama Nayanar, did not flinch when he first saw the severed braid. He recognised that what had taken place was not misfortune but the working of a higher design. To accept the bride in that state was to affirm that devotion stood above ritual blemish. Surrounded by such understanding, Manakkanjarar's act was not isolated defiance but part of a shared fidelity. It is this clarity, to embrace sacrifice without hesitation and to see beyond the surface of dishonour, that defines his sainthood.

## Remembrance

Manakkanjarar's life is remembered not as a tale of family honour lost and regained but as proof that devotion must be immediate, unwavering, and whole. His Guru Poosai is observed in the month of Margazhi, on the day of Suvathi nakshatram, when devotees recall the act that placed fidelity to Sivaperuman above every other bond. In Kancharur and throughout the Saiva tradition, his figure endures as a reminder that worship is tested not in isolation but in the very midst of worldly obligation. In the chapters ahead we continue along this path, meeting saints whose lives unfold further dimensions of this uncompromising devotion.

# Astronomy and the Science Behind Tamil Tradition of Celebrating Birthday Based on Birth Star (Nakshatra/Udu/Naalmeen) – A Brief Explanation with Evidence

Thiruchitrambalam

**Last month's continuity...**

## Full Moon and Tamil Lunar Months

After the Sun enters an Orai (Zodiac sign), the Moon reaches the star (Naalmeen) directly opposite to that Orai (i.e., at 180°), and when it becomes a full moon (Muzhu Nilavu) in that Naalmeen, it marks the lunar month. For example:

- If the Sun enters Mesha Orai (Aries), and the Moon is full at Chithirai Naalmeen (which lies in Tula Orai, Libra, directly opposite Mesha), then the month is Chithirai.

This concept is recorded in Silappathikaram (2nd century CE) by Ilango Adigal:

**"சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென"**
**- (சிலப். இந்திரவிழவூரெடுத்த காதை, 64)**
**"Chiththirai-ch-Chiththirai thingal sernthena"**
**("On the Chithirai star, during the Chithirai month")**

Other examples include:

- **Full moon in Visagam Naalmeen → Vaikaasi** month




Anusham, Kethai, Moolam forming Viruchigam (Scorpio) Orai – (R. Sivakumar, 2023a)

- **Full moon in Anusham → Aani** month
- **Pooradam → Aadi**
- **Thiruvonam → Aavani**
- **Poorattadhi → Purattaasi**
- **Aswini (Asuvathi) → Aippasi**
- **Kaarthigai** Naalmeen **→ Kaarthigai month**
- **Magayiram (Maan Thalai) → Margazhi**

"Mazhai neengiya maavizumbil mathiseerntha Magavenmeen" (Pati. 34–35)

- **Poosam → Thai**
- **Magam → Maasi**

"Maasi ninRa Maagoor Thingal" (Pati. 58) – Said in the context of King Cheran Aadukotpattu.

Finally, **Panguni** (the last Tamil month) comes from the root "Pangu + Nuni", meaning a month that shares the tip (end) of an Orai, i.e., a boundary month between two Orai.

### 4. What Is Orai or Raasi Mandalam (Zodiac Sign)?

An Orai refers to a defined group of star constellations (i.e., a specific cluster of Naalmeen or sidereal groupings). In astrological terminology:




**Dr. R. Sivakumar,**
(University Sains Malaysia, Penang, Malaysia)


- Raasi: From Ira + See, interpreted as "இரா(இரவு) + சி>சீ Ira (night) + See>Sri ( சீவிக்கும் lasting forever Lakshmi/Sacred life force)"
- Zodiac: Greek root meaning "circle of animals," but in Tamil context:
  - o Sothiyam = Sothi (light) + Iyam (place of arrangement) → "Place of divine luminous figures" ( சோதியம்= சோதி + இயம்: சுல் + தீ + இயம் , சொல்+தீ+ இயம் >சொலி (luminous) +தீ (fire) + இயம்( state/place) > சோதி + இயம்)

The word Orai (ஓரை) may also come from:

- " ஓரை = ஒல்- ஒர்-ஓர் +ஐ **Ol-Or+ Ai-Orai": Signifying a beautiful cluster of stars or constellations, metaphorically even a gathering of divine women.**

Classical texts such as Pingala Nikandu and Senthan Divakaram (AD 9th cent ) offer multi-layered meanings:


**ஓரைக்கு : விளையாடுங் கலமும், இராசியும், ஓரிடைச் சொல்லும், குர**
**வையும் - ஓரை ( நிகண். பிங்கலம் 10 :225)**

**"Vilayaadum kalamum, Raasiyum, Oraidai cholllum, Kuravayum – Orai"**
**(Nikandu Pingalam 10:225)**

("For the word 'Ōrai': it can mean a gaming vessel, a zodiac sign, an intermediate word, or a woman — Ōrai (Nikanṭu. Pingalam 10:225).")

Example:

The Naalmeen – Anusham, Kethai, and Moolam belong to the constellation of Scorpio, which in Tamil is called Viruchigam or Nali Orai.




The Sun's apparent motion through Simma/Madangal (Leo) – from Star Constellations: The Zodiac (2017)

### Zodiac System in Tamil Astronomy

The 27 Naalmeen (Nakshatras) that form the lunar

cycle (Chandira Mandalam) were aligned by Tamils with the solar ecliptic (Sun's apparent path) and divided into 12 Orai (Zodiac signs). As the Sun appears to move through these star constellations, the Tamils conceptualized 12 celestial houses (Rasi Illam).

In this path, the Sun appears to successively enter each Orai during the year:

**Mesha (மேழம்) – Aries,Idabam (இடபம்) – Taurus,Aadavai (ஆடவை) – Gemini,Kadagam (கடகம்) – Cancer,Madangal ( மடங்கல்) – Leo,Kanni (கன்னி) – Virgo,Thulai (துலை) – Libra,Nali (நளி) – Scorpio,Silai (சிலை) – Sagittarius,Suravam (சுறவம்) – Capricorn, Kumbam (கும்பம்) – Aquarius, Meenam (மீனம்) – Pisces**

Thus, in the 360° circular ecliptic, each Orai occupies 30°: 360°÷12=30°

Thirumoolar confirms this astronomical division in the Thirumandiram:

**வந்திடும் அக்கரம் முப்ப திராசியும்**
**வந்திடும் நாளது முந்நூற் றறுபதும்**
**வந்திடும் ஆண்டும் வகுத்துறை அவ்விலே.**


**(திருமந். 10.4.9.14)**

**"Vandhidum akkaram muppathu Raasiyum**
**Vandhidum nālathu munnuṟṟaṟupathum**
**Vandhidum āṇḍum vakuththurai avvilē"**


Meaning: The appearing Akara denotes the thirty-degree span of each zodiac (Rāsi),
The arriving days add up to three hundred and sixty,
Thus, the passing year is proportionately divided within it.

### Division of Nakshatras

Since one Raasi = 30°, and one Nakshatra = 13° 20′, only 2.25 Nakshatras fit into each Raasi:




The 12 Zodiac Constellations – (R. Sivakumar, 2023a)




The 12 Zodiac Constellations – (R. Sivakumar, 2023a)

30°÷13°20′≈2.25. So each Naalmeen was divided into 4 quarters, leading to:

27 Nakshatras×4=108 Padas (subdivisions)

**Example:**

In Mesha Raasi (0° – 30°):

- **Aswini** (0°–13°20′) – Full
- **Parani** (13°20′–26°40′) – Full
- **Karthigai** (26°40′–30°) – Only ¼ part (first pada)

This shows how Tamil zodiacal science is intricately built on Lunar-Solar-Sidereal Prediction methods.

**Comparison with the Gregorian Calendar**

The Tamil Zodiacal system, based on Sidereal Lunar-Solar predictions, offers greater scientific accuracy and cultural depth than the modern Gregorian calendar, which relies only on solar calculations.

The Gregorian system does not support calculations based on:

- **Lunar cycles**
- **Jovian (Jupiter-based) year predictions**
- **Sidereal (stellar) predictions**

In contrast, Tamil Timekeeping integrates all three and offers a robust astronomical model rooted in cultural, spiritual, and scientific insight.

**5. How is Nakshatra's Birth Day Calculated in Astrology?**
**Birth Star (Nakshatra of Birth):**

At the time of a person's birth, taking that specific month of the year into account, the star (nakshatra) in which the moon is positioned is considered that individual's birth star.

The nakshatra birthday refers to the day in which, each year, the moon returns to the same nakshatra it was on the day of birth. This cannot be accurately calculated using the solar-based Gregorian calendar.

**6. How Does Tamil Tradition View the Significance of Nakshatra Birth Day Calculation?**

Tamils developed a precise Lunar-Solar-Sidereal model (i.e., Nakshatra-based astronomical prediction system) which used natural cosmic elements as inputs to calculate physical time accurately. The foundational basis of this system is found in the Tolkappiyam, which states:

**மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும் துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை. - (தொல். பொருள். கள 135)**

**"For one who has abandoned the order of the stars (ōrai) and days (naal), there is no righteous discipline."**

**(Tolkappiyam, Porul. Kalaviyal 135)**

This implies that stars and days establish ethical order for living beings. Tamil tradition sees Time (Kālam) as a force that maintains morality, and conversely, the loss of ethical behavior disrupts time. This subtle insight emphasizes the intimate link between ethics and time. Thus, Tolkappiyar asserts that time must be governed through the proper ethical structure.

In the Tamil worldview, celebrating a person's nakshatra birthday is not just symbolic but a sacred observance. On that special day:

- **Anger must be shed**
- **Benevolence and donations are encouraged**
- **People wear white attire (vellanai)**
- **All living beings are to be treated with kindness**

**As expressed in Tolkappiyam:**

**சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்**
**பிறந்த நாள் வயின் பெருமங் கலமும்**
**- (தொல் - பொருள் . 88: 7-8)**

**"On the best day, remove all anger,**
**Celebrate the birth day with great festivity."**
**(Tolkappiyam, Porul 88: 7–8)**

In astrology, this birth star is matched with a person's traits and used to link destiny (fate), personality, and future life events.

The Tolkappiyam suggests that ōrai (zodiac division) and naal (star/day) reveal a hidden ethical force that connects to internal time, offering a structured cosmic model that aligns both macrocosm and microcosm.

**7. Can the Significance of Nakshatra Birthday be Explained Scientifically?**

Yes. The modern science of Chronobiology, which studies the timing of biological rhythms, aligns well with ancient Tamil sidereal astrology. Tamil nakshatra predictions are in harmony with scientific observations:

i. The six major time divisions of the sun (solar day segments) influence the circadian rhythms of all life forms.

ii. The waxing and waning phases of the moon (lunar cycle) affect:

- **Menstrual cycles**
- **Emotional states**
- **Sleep patterns**
- **Neurological growth in children**

(Roenneberg et al., Nature Reviews, 2007; Cajochen et al., Current Biology, 2013)

iii. Celestial bodies (planets, stars) affect living beings through:

- **Intense heat (radiation)**
- **Ray fields**
- **Dark matter**
- **Gravitational waves**
- **Quantum effects**

**Continued...**

# 1.3.9.Eighth Question (Refuting Anthakkarana - Aanmavaada)



**Last Month Summary:**

One of Sivakan's friends asked if the soul could actually be the Lord Almighty, since He is all-pervasive and present within the body too. Sivakan explained that although both the Lord and the soul are conscious, their intelligence differs. The soul's awareness only appears through the body and remains ignorant without this connection, while the Lord's intelligence is eternal and complete, never needing a body. The soul depends entirely on the Lord to gain knowledge, but the Lord's awareness is independent and infinite. Because of this, Sivakan clarified that the soul is not the Lord, but a distinct, dependent being.

The next day when we met up, I suggested, "How about we go and play today?" One of my friends asked, "Is that you thinking, or is it just your mind thinking?" Another quickly jumped in, saying, "I'm no different from my mind. I am the mind, and the mind is me."

The chat carried on. Someone pointed out, "It's really foggy outside. If we play in this weather, we might catch a cold." Another shrugged and said, "So what? Let's just give it a go and see what happens." Finally, one of the group made the call: "The fog will lift soon enough, and once we start running around our bodies will warm up. The chance of getting sick is pretty small. Let's just go out and play."

What started as a simple back-and-forth turned into an interesting discussion about how the mind works. In that short exchange, we'd gone through four stages: thinking about doing something, hesitating, feeling inspired to try, and finally making a decision. We asked ourselves, were those steps carried out by us, or by the mind? We agreed that they were done by the mind. But then we realised: the mind itself is inert, it has no intelligence of its own.

Just like the eyes and ears are tools for seeing and hearing, the mind is also just a tool—an inner instrument that allows us to think, decide, remember, and identify ourselves. Depending on the function, it takes on four names: manas (mind), buddhi (intellect), chittam (memory), and ahankaram (ego).

The soul, the uyir, the true "I", is something else altogether. It's the soul that actually

experiences and enjoys life, using the mind and senses as its instruments. From this, we concluded that the soul is real and distinct from the mind and its functions.

Saiva Philosophy Reference: The takeaway of this story is that the mind, though appearing active, is an inert instrument like the senses, functioning only as a tool for thought, decision, memory, and ego. It is the soul (uyir), distinct from these inner instruments, that truly knows, experiences, and enjoys. Thus, Saiva philosophy affirms the soul's existence as separate from the mind, which merely serves as its vehicle for worldly experience.

# தென்னாட்டு நிகழ்வுகள்



புரட்டாசித் திங்கள் பேரோடுக்க (மாலய) மறைமதி வழிபாடுகள் (21-09-2025)



தென்னாட்டில் திருமுறை விண்ணப்பமும் சான்றிதழ் வழங்கலும் (20-09-2025)

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆவணித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (07-09-2025)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபத்து இரண்டாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 20ம் நாள் நிறைமதி அன்று (06-10-2025 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org